Registered as a NewsPaper

விலை ரூபா:10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | புரட்டாதி-29 | 15-10-2005 | சனிக்கிழமை | ஓசை-240


கணேசா நகையகம்

தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்

இல:123, பஜார் வீதி, வவுனியா.
T.P.-024-2222464

இல:194, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 021-2225987

(சி-12955)

# சர்வதேச தொண்டு நிறுவனங்களின் பணிகளுக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் பாராட்டு

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதலளிக்கின்றன

(கிளிநொச்சி)

**சர்வதேச தொண்டு நிறுவனங்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மேற்கொண்டு வரும் பணிகளுக்கு அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் பாராட்டுத் தெரிவித்துள்ளதுடன் இப்பணிகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதலளிப்பதாகவும் தெரிவித்துள்ளார். கிளிநொச்சியில் உள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் திட்டமிடல் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற சர்வதேச தொண்டர் தாபனங்களின் பிரதிநிதிகளுடனான சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:- நீண்டகாலமாக கொடிய யுத்தத்திற்கு முகம்கொடுத்த மக்களாகிய நாம் பெரும் மனிதாபிமான உதவியை எதிர்பார்த்து நிற்கிறோம். கடந்த மூன்றரை ஆண்டுகளாக இடம்பெற்ற சமாதான முயற்சிகளில் மிகுந்த அர்ப்பணிப்போடு ஈடுபட்டு மனிதாபிமான நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு பெரும் முயற்சிகளை எடுத்து, அம்முயற்சிகள் கனவாகிப் போனநிலையில் இன்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கைகொடுப்பவைகளாக, ஆறுதலளிப்பவைகளாக சர்வதேச தொண்டர் தாபனங்கள்தான் பணியாற்றிக் கொண்டிருக்கின்றன.

(12 ஆம் பக்கம் பார்க்க)



# சிறிலங்காப் பொலிசார் ஒருவர் நெல்லியடியில் சுட்டுக்கொலை!

## நேற்றிரவு சம்பவம்

யாழ். நெல்லியடிப் பகுதியில் நேற்று இரவு 8.00 மணியளவில் இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் சிறிலங்கா பொலிசார் ஒருவர் உயிரிழந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. நெல்லியடி பொலிஸ் நிலையத்திற்கு அருகிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# திருமலை தொழில்நுட்பக் கல்லூரிக்குள் சிறிலங்கா இராணுவம் முகாம் அமைப்பு!

## –போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிற்கு முறைப்பாடு

திருகோணமலை தொழில்நுட்பக்கல்லூரிக்குள் புதிய இராணுவ முகாம் அமைப்பதற்கான கட்டுமானப் பணிகளை சிறிலங்கா இராணுவம் மேற்கொண்டுவருகிறது திருமலை தொழில்நுட்பக்கல்லூரிக்குள் புதிய இராணுவ முகாம் அமைப்பதை பொதுமக்கள் அமைப்புக்கள் கடுமையாக கண்டனம் தெரிவித்துள்ளனர்.

தொழில் நுட்பக்கல்லூரிக்கு சில நாட்களுக்கு முன்பு பெரும் எண்ணிக்கையிலான வாகனங்களுடன் சென்ற சிறிலங்கா இராணுவத்தினர் காவலரண், கொட்டகைகள் ஆகியவற்றை இறக்கியுள்ளனர். பெரும் எண்ணிக்கையிலான இராணுவத்தினரும் அங்கு இறக்கப்பட்டுள்ளதாக அப்பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# காவலரண் மீது கைக்குண்டு வீச்சு சந்திவெளியில் சிப்பாய் பலி!

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டம் சந்திவெளிப்பகுதியில் உள்ள சிறிலங்கா படையினரின் காவலரண் மீது இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட தாக்குதலில் படைச்சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இனந்தெரியாத நபர்கள் நேற்றுமுன்தினமிரவு 9.30 மணியளவில் மேற்கொண்ட இந்தத் தாக்குதலில் குறித்த படைச்சிப்பாய் படுகாயமடைந்த நிலையில் பொலநறுவை மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார். தாக்குதல் நடாத்தப்பட்டதையடுத்து படையினர் அப்பகுதியில் கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டையும் நடாத்தியுள்ளனர்.

## வீரவணக்கம்

முல்லைத்தீவு நகர்ப்பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் நாட்டுப்பற்றாளர் ஒருவர் சாவடைந்துள்ளார்.

நாட்டுப்பற்றாளர்-தேவகுமார் முருகானந்தம் (மகாலிங்கம் தேவகுமார் முருகானந்தம், செல்வபுரம் முல்லைத்தீவு. தற்போதைய முகவரி 8 ஆம் வட்டாரம் மந்துவில் புதுக்குடியிருப்பு) என்ற நாட்டுப்பற்றாளரே சாவடைந்துள்ளார். இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

# சுதந்திரக் கட்சியைப் பாதுகாக்க பண்டாரநாயக்க குடும்பம் ஆலோசனை

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, லண்டனுக்கு செல்வதற்கு முதல் நாள், சிறிலங்கா சுதந்திரக் கட்சியையும், அதன் கொள்கை களையும் பாதுகாப்பது தொடர்பாக தனது சகோதரர்களான அநுரா பண்டார நாயக்கவுடனும், சுனேத்ரா பண்டாரநாயக்காவுடனும், அநுரா பண்டார நாயக்கவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் முக்கிய சந்திப்பொன்றை நடத்தியுள்ளார்.

எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் மகிந்த ராஜபக்ஷ, ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்துள்ள நிலையில், எதிர்காலத்தில் சுதந்திரக்கட்சியையும், அதன் கொள்கைகளையும். எவ்வாறு பாதுகாப்பது என்பது தொடர்பில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# புலமைப் பரிசில் பரீட்சை முன்னணி பெறுபேறுகள்



இ.மலர்விழி

(அலுவலக செய்தியாளர்)

கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் கிளிநொச்சி மாவட்டத்தில் கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி மாணவி முதலாம் இடத்தினைப் பெற்றுள்ளார்.

இதன் அடிப்படையில் புனித திரேசா மகளிர் கல்லூரி மாணவியான இரவீந்திரன் மலர்விழி என்ற மாணவியே 160 புள்ளிகளைப் பெற்று மாவட்டத்தில் முதல் இடத்தைப் பெற்றுள்ளார். அதே கல்லூரியைச் சேர்ந்த பா. பிறேமன் 136, வி. தட்சாயினி 131 ஆகிய புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

கிளிநொச்சி இராமநாதபுரம் மகாவித்தியாலயத்திலிருந்து ந. கதீசன்159, மி. யதுர்ஷா143, அ. எழில்மதி 140, கோ. விதுர்சன் 138, சி. லக்சனா 136,சி. ஜனார்த்தி 134, கி. ஜனார்த்தனான் 133, இ. பிரசாந் 132, ச. ஐங்கரன 130, லோ. கிறைன்ஸ்தி சாந்த 130

(12 ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைப்புலிகளை வரவேற்க மறுக்கும் ஐரோப்பிய ஒன்றியத்தின் முடிவை மாற்றுக!

## கிளி.தமிழ் மாணவர் ஒன்றியம் மகஜர்

(அலுவலக செய்தியாளர்)

தமிழ்மக்களின் ஏகபிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப்புலிகள் ஐரோப்பிய நாடுகளுக்கு பயணிப்பதை வரவேற்பதில்லை என்ற ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் முடிவைமாற்ற வேண்டும் என கிளிநொச்சி தமிழ்மாணவர் ஒன்றியம் மகஜர் சமர்ப்பித்துள்ளது.

தமிழ் மாணவர் ஒன்றியத்தால்தயாரிக்கப்பட்ட மகஜர் கிளிநொச்சியில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தொண்டு நிறுவனமூடாக ஐரோப்பிய ஒன்றியத்தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இலங்கைத் தீவில் வாழும் தமிழ்மக்களாகிய நாங்கள் பெரும்பான்மையின அரசாங்கத்தால் 50 வருடங்களுக்கு மேலாக ஆளப்பட்டு வருகின்றோம். எமது அரசியல், சமூக பொருளாதார குடியியல் உரிமைகள் அனைத்தும் மறுக்கப்பட்டுள்ளன. விடுதலைப்புலிகளின் தலைமைத்துவத்தை நாம் இதயபூர்வமாக எமது தலைமையாக ஏற்றுக்கொண்டுள்ளோம். இந்நிலையில் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் உங்கள் நாடுகளில் வரவேற்கப்படமாட்டார்கள். என அறிவிக்கப்பட்டிருப்பது எமது தமிழ்சமூகத்திற்கு ஐரோப்பிய நாடுகளின் நடுநிலைத் தன்மை குறித்த சந்தேகத்தை எழுப்பியுள்ளது. இம்முடிவை மாற்றி தமிழ் சமுதாயத்திற்கு தலைமைத்துவம்


(12 ஆம் பக்கம் பார்க்க)

# அறிவித்தல்

விவசாயத் திணைக்களம் உற்பத்தி செய்து வழங்கும் நல்லின விதைபொருட்களான நெல் மற்றும் மறுவகைப் பயிர்களான மரக்கறிவிதை,தானியப்பயிர்விதை, கிழங்கு வகைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் ஆகியன

உற்பத்திக்காக அல்லது விற்பனைக்காக மொத்தமாகவும் சில்லறையாகவும் பெறுவதற்கு விரும்புபவர்கள் முற்கூட்டியே பதிவு செய்ய வேண்டும் என விவசாயத் திணைக்களத்தின் விற்பனை முகவராண்மையைப் பெற்றுள்ள தனியார் பண்ணையாளரான முரசுமோட்டை மு. கந்தசாமி கேட்டுள்ளார். அத்தோடு நல்லின பழமர மரக்கறி நாற்றுக்களும், தென்னம் பிள்ளைகளும் விற்பனைக் குண்டு. தொடர்பிற்கான முகவரி முரசுமோட்டை, மு. கந்தசாமி, இல.261, புதிய புன்னை நீராவி, விசுவமடு.

(சி.13068)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

## முத்துவேலு கந்தசாமி

உலக அஞ்சல் தினமாகிய 2005 ஒக்ரோபர் 9 ஆம் திகதி மத்திய மாகாணம் கண்டி மாநகரில் நடந்த கௌரவிப்பின் போது அகில இலங்கை ரீதியில் 40 வருடங்களைப் பூர்த்தி செய்த சிறந்த தபால் ஊழியராக விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட கிளிநொச்சி அக்கராயன் குளம் உப அஞ்சலக ஊழியர் திருவாளர் முத்துவேலு கந்தசாமி அவர்களது சேவை மேலும் நீடித்து பல்லாண்டு காலம் நல்வாழ்வு வாழ நாமும் அவருக்கு நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு அவரது சேவையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

உப – அஞ்சலதிபர்,
பணியாளர்கள்,
அக்கராயன் குளம்.

(சி.6852)

# Danish Demining Group, Sri Lanka
# VACANCY ANNOUNCEMENT

Danish Demining Group (DDG) has currently a position vacant for an Office Manager for its Operational Headquarters in Jaffna.

DDG is looking for a person who is able to take responsibility for the daily administration of DDG's Operational Headquarters in Jaffna as well as be the coordinator of DDG's sub-offices in the field and the Colombo Office. The duties of the Office Manager will be varied from doing the daily account, deal with logistics matter to co-ordinate and solve different questions for DDG e.g.contact to local authorities, the Sri Lanka Army and the TRO.

## Minimum qualifications and experience required:

- Have a certain degree and experience in accounting, logistic and administration.
- Speak both Tamil and Sinhala
- Be fluent in English
- Be computer literate.

## How to Apply for the positions

Applicants shall address a written application to DDG, stating why and how they fit the selection criteria and attach a copy of CV with contact details.

Applicants should be emailed to Opmanager @ddg.lk, with a carbon copy (c.c) to **adminmanager** @ddg.lk or delivered/posted to Operations **Manager, DDG, 18/10, Wyman Road, Jaffna, on or before 20 October 2005.**

Only candidates who meet all the above requirements will be invited for an interview / test.

## The Organization

DDG is an active participant in the global effort to reduce the effects of In landmines. The objective of DDG is to contribute towards the goals and objectives of the National Mine Action Program for Sri Lanka, which aims to reduce the threat of mines and other unexploded ordnance from priority areas. The Demining project in Sri Lanka is scheduled to run upto December 2006, with the possibility of extension upto 2008, depending on funding.

(சி.13067)


கிளிநொச்சி மகாவித்தியாலயத்தின் கல்வி நிதிய வளர்ச்சிக்காக

கிளிநொச்சியில் இன்று

முத்தமிழ் அரங்கம்

இடம்:பண்பாட்டு மண்டபம், கிளிநொச்சி.

நடன நாடக இசைநிகழ்ச்சி

மூன்றுமணி நேர முத்தமிழ்
சுவை காண முன்வாருங்கள்
நிதிய வளர்ச்சிக்காக உதவிடுங்கள்

முதலாவது காட்சி பிற்பகல் 2.00 மணி.
கட்டணம்-ரூபா 100/=
இரண்டாவது காட்சி மாலை 7.00 மணி
கட்டணம் ரூபா 200/=, 500/=,1000/=
ரிக்கற் மண்டப வாசலில்....



மாணவர்களுக்கான காட்சி
இன்று காலை 9.00 மணி.
பண்பாட்டு மண்டபத்தில்
கட்டணம் ரூபா-50/=

விளம்பர அனுசரணை:
குமரகுரு புடைவை அழகுப்பொருள் வாணிபம்
பிரதான வீதி, கிளிநொச்சி.

(சி.13057)


# WORLD MENTAL HEALTH DAY-2005

# சர்வதேச உளநல நாள் –2005

சர்வதேச உளநல தினத்தை முன்னிட்டு முதல்முறையாக கிளிநொச்சியில் ஒரு நாள் நிகழ்வொன்றை நடாத்தவுள்ளோம். இதில் அனைவரையும் பங்கேற்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

THE ORHANIZING COMMITTEE IS PLEASED TO INVITE YOU TO A PROGRAMME TO MARK THE WORLD MENTAL HEALTH DAY-2005.

CHIEF HUEST:-PROG-DAYA SOMASUNDRAM
CONSULTANT PSYCHD ARSST
NORTH-RESION
SRILANKA

திகதி:–15–10–2005 (சனி)
திகதி:– காலை 8.00 மணி (பொது மைதானம்,கிளிநொச்சி)
மாலை 4.00 மணி (கருணா நிலையமண்டபம்)

DATE-15-10-2005
VENUE:-SPORTS MEET 8.AM IN CENTRAL GROUND
CULTURAC SHOW 4.Pm IN EXIBITIN KARUNANILAYAM HALL


விளம்பர அனுசரணை:– சுமங்கலி நகைப்பூங்கா
யாழ்.சாலை கிளிநொச்சி

(சி.13069)



ஒக்ரோபர் வாசிப்பு மாதம்
கல்வித்துறை வேண்டி நிற்கும் புதிய முகாமைத்துவ நுட்பங்கள்
வாசியுங்கள்
வருடாந்தச்சந்தா ரூ.300 மட்டுமே
தொடர்புகளுக்கு;
AHAVILI,3,Torrington Vvenue,colombo-7,Srilanka,
TEL:011-2506272 E-MAIL:ahavili @ Viluthu.org

அகவிழி
ஆசிரியத்துவ நோக்கு

# தீவிரவாதிகள்-ரஷ்ய படையினர் மோதல்;

## 61 தீவிரவாதிகள் [illegible] 24 பொதுமக்கள் பலி


**ரஷ்யாவின் [illegible] தீவிரவாதிகளுக்கும் படையினருக்கும் [illegible] இடம்பெற்ற மோதலில் 61 செச்சினிய தீவிரவாதிகளும், 24 படையினரும், 24 பொது மக்களும் பலியாகியுள்ளனர்.**

இந்த நகரத்தின் மீது நூற்றுக்கும் அதிகமான செச்சினிய தீவிரவாதிகள் நேற்று முன்தினம் மாலை தாக்குதலை நடத்தினர்.

இதனைத் தொடர்ந்து நகரத்தை சுற்றிவளைத்து தாக்குதல் நடத்துமாறு ரஷ்ய சனாதிபதி விளாடிமிர் புட்டின் தமது இராணுவத்தினருக்கு உத்தர விட்டிருந்தார்.

இதனையடுத்து இடம்பெற்ற தாக்குதல்களிலேயே இவர்கள் பலியாகியுள்ளனர்.

மொஸ்கோ ஆட்சிக்கு எதிராக பத்து வருடகாலமாகத் செச்சினிய தீவிரவாதிகள் தாக்குதலை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



தமிழகம் எண்ணூரில் கார்கில் நகரில் உள்ள சுனாமி குடியிருப்புகள் பகுதியில் மழைநீர் புகுந்துள்ளது. அங்குள்ளவர்கள் தங்கள் உடமைகளோடு வேறு இடங்களுக்கு குடிபெயர்ந்து செல்கின்றனர்.

# கொண்டலீசா ரைஸ் ரஷ்யா பயணம்

அமெரிக்க இராஜாங்க செயலாளர் கொண்டலீசா ரைஸ் ரஷ்யாவிற்கு திடீர் விஜயம் ஒன்றை மேற் கொண்டுள்ளார். ஈரானின் அணுவாயுத அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக ஆராயும் நோக்கில் இந்தவிஜயம் அமைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. ரஷ்ய சனாதிபதி விளாடிமிர்புட்டின், அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சர் ஆகியோருடன் ஈரானின் அணுவாயுதத் திட்டம் குறித்து இவர் கலந்துரையாடியுள்ளார். ஈரான் அணுவாயுத உற்பத்திகளை அதிகரிப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. இதேவேளை ரஷ்யா ஈரானின் அணுத் திட்டஅபிவிருத்திகளுக்கு உதவி வரு வதாக குற்றம்சாட்டப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

-பூகம்பத்தில் பலியானவர்களின்-

# சடலங்களை புதைக்க இடமின்றி பாகிஸ்தானில் உறவினர்கள் அவலம்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான் முஷபராபாத் நகரில் பூகம்பத்தால் இறந்தவர்களின் உடல்களை புதைக்க இடம் இல்லாமல் உறவினர்கள் தவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளதென தெரிவிக்கப் படுகின்றது.

பாகிஸ்தானில் கடந்த சனிக்கிழமை ஏற்பட்ட பூகம்பத்தில் 40 ஆயிரத்துக்கும் அதிகமான பேர் பலியானார்கள் கட்டட இடிபாடுகளுக்குள் ஏராளமான பேர்சிக்கிக் கிடப்பதால் சாவு எண்ணிக்கை மேலும் உயருமென எதிர்பார்க்கப்படுகிறது. மீட்புக் குழுவினர் தினமும் இடிபாடுகளை அகற்றி ஏராளமான சடலங்களை மீட்டு வருகிறார்கள்.

பூகம்பத்தால் பெரிதும் பாதிக்கப்பட்ட முஷபராபாத் நகரில் சடலங்கள் தொடர்ந்தும் மீடகப்பட்டு வருகின்றன.

இதனால் அந்த நகரில் தங்கள் உறவினர்களை இழந்தவர்கள் அவர்களுடைய சடலங்களை வைத்துக்கொண்டு புதைக்க இடம் இல்லாமல் தவிக்கிறார்கள்

# சதாம்ஹுசைனுக்காக வாதாட பிரித்தானிய சட்டத்தரணி

ஈராக்கின் முன்னாள் சனாதிபதி சதாம்ஹுசைன் மீது சுமத்தப்பட்டுள்ள மனிதப்படுகொலை குற்றச் சாட்டுக்களை எதிர்த்து வாதிடுவதற்கு பிரித்தானியாவின் அதியுயர் சட்டத்தரணி ஒருவரின் ஒத்துழைப்பு கோரப் பட்டுள்ளது.

இதனை முன்னிட்டு சதாம் ஹுசைனின் சட்டத்தரணிகள் குழுவொன்று பிரித்தானி யாவின் சட்டத்தரணியிடம் தமது கோரிக்கையைச் சமர்ப்பித் துள்ளார்.

எவ்வாறாயினும் நியாயமான காரணங்கள் முன்வைக்கப்பட்டால் மட்டுமே சாதம்ஹுசைன் சார்பில் விவாதிடப்போவதாக அவர் குறிப்பிட்டார்.

# சீனாவின் "சென்சௌ-6" விண்கலம் திசை மாறிச் [illegible]

[illegible]

சீனாவினால் விண்வெளிக்கு அனுப்பப்பட்ட [illegible] பாதையில் இருந்து திசை மாறியுள்ளது.

கடந்த ஆறாம் திகதி "சென்சௌ-6" என்ற விண்கலத்தை சீனா விண்ணில் செலுத்தியது. இதில் பீ ஜங்கலாங [illegible] என்ற இரண்டு வீரர்களையும் அனுப்பி வைத்தது. விண்ணில் செலுத்திய இந்த விண்கலம் பூமியின் சுற்றுப்பாதையில் சுற்றி [illegible] அதன் சுற்றுப்பாதையில் இருந்து விண்கலம் [illegible]

மீண்டும் அதை சுற்றுப்பாதையில் [illegible] திருப்பும் முயற்சியில் இருந்து நிபுணர்கள் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள். இந்த முயற்சியின் பயனாக 800 மீற்றர் அந்த விண்கலம் உயர்த்தப்பட்டது. 61ஆவது சுற்றில் அந்த விண்கலத்தின் பாதையில் அது கொண்டுவரப்படும் என்று நிபுணர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

# பதுங்கு குழிகளை கட்ட இந்திய இராணுவம் உதவி; செய்திக்கு பாகிஸ்தான் இராணுவம் மறுப்பு

(இஸ்லாமபாத்)

எல்லைப்பகுதியில் உள்ள பாகிஸ்தான் இராணுவ பதுங்குகுழிகளை மீண்டும் கட்ட இந்திய இராணுவத்தினர் உதவி செய்தார்கள் என்ற செய்திக்கு பாகிஸ்தர்ன் மறுப்புத் தெரிவித்துள்ளது.

பூகம்பம் காரணமாக எல்லைக் கட்டுப்பாட்டு கோட்டுக்கு அருகே உள்ள அமான் சேது என்ற இடத்தில் பாகிஸ்தான் இராணுவ பதுங்கு குழிகள் சேதம் அடைந்திருந்ததாகவும் பாகிஸ்தான் இராணுவத்தினர் கேட்டுக் கொண்டதற்கிணங்க இந்திய இராணுவத்தினர் எல்லைக் காட்டுப்பாட்டு கோட்டை தாண்டிச் சென்று, அந்த பதுங்கு குழிகளை மீண்டும் கட்ட உதவி செய்ததாகவும் சிறி நகரில் இந்திய இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இதை பாகிஸ்தான் இராணுவம் மறுத்துள்ளது. இது பற்றி பாகிஸ்தான் இராணுவ செய்தித் தொடர்பாளர் சவுகத் சுல்தான் நிருபர்களிடம் கூறுகையில்;பாகிஸ்தான் பதுங்கு குழிகள் பீரங்கி குண்டுகளைத் தாங்கும் அளவுக்கு வலுவாகக் கட்டப்பட்டுள்ளன.

எனவே பதுங்கு குழிகள் சேதமடைந்தன என்ற கேள்விக்கே இடமில்லை, எல்லைக்கோட்டைத் தாண்டி வந்து இந்திய இராணுவத்தினர் பதுங்கு குழிகளை கட்ட உதவி செய்தார்கள் என்ற செய்தி ஆதாரமற்றது, உண்மைக்கு புறம்பானது.

பூமி அதிர்ச்சியில் 415 பாகிஸ்தான் இராணுவத்தினர் பலியாகியுள்ளனர். முஷபராபாத், ரவலாக்கோட், பாக் ஆகிய இடங்களில் மட்டுமே இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

எல்லைக் கட்டுபாட்டுகோடு அருகே பாகிஸ்தான் இராணுவத்தினர் யாரும் இறக்கவில்லை என அவர் தெரிவித்தார்.

# முன்பள்ளிக்குள் புகுந்து இளைஞன் துப்பாக்கிச் சூடு;

## 15 குழந்தைகள் காயம்

(பீஜிங்)

சீனாவில் கிழக்குப் பகுதியில் உள்ள முன்பள்ளி ஒன்றுக்குள் புகுந்த இளைஞன் ஒருவர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 15 குழந்தைகள் காயமடைந்துள்ளனர்.

காலைநேர உடற்பயிற்சியில் மாணவ மாணவிகள் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை அப்பகுதிக்குள் நுழைந்த இளைஞன் அவர்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டார். காயமடைந்த குழந்தைகளில் ஏழு பேரின்நிலை கவலைக்கிடமாக உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.



சிறிநகரில் உள்ள இராணுவ தலைமையகத்தில் பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட காஷ்மீர் மக்களுக்கு நிவாரணப் பொருட்களை கொண்டுசெல்ல காத்திருக்கும் இராணுவத்தினர்.

# நான்காயிரம் ஆண்டுகள் பழமையான "நூடில்ஸ்" சீனாவில் கண்டுபிடிப்பு

(பீஜிங்)

சீனாவின் மேற்குப் பகுதியில் அகழ்வாரய்ச்சி நடத்திய இடத்தில் இருந்து நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தயாரிக்கப்பட்ட நூடில்ஸ் உணவுடன் கோப்பை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதுதான் உலகில் கண்டுபிடிக்கப்பட்ட மிகப்பழமையான உணவு என்று பிஜீங்கைச் சேர்ந்த மண்ணியல் ஆராய்ச்சியாளர் லூஹூப்யுவான் கூறியுள்ளார்.

அதில் சேர்க்கப்பட்டுள்ள பொருட்கள் என்ன என்பது பற்றியும் ஆய்வு மேற்கொள்ளப் பட்டுள்ளது.

குயின்காய் மாநிலத்தில் மின்கே என்ற இடத்தில் பத்தடி ஆழ மண்ணுக்குள் களி மண்ணாலான கும்பு வடிவப் பாத்திரம் தலை குப்புறக்கவிழ்ந்து கிடந்துள்ளது. அதனுள்ளிருந்து 20 அங்குல நீள நூடில்ஸ் உணவு எடுக்கப்பட்டது. அது சோள மாவினல் தயாரிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

# 80 மணிநேரத்தின் பின் பார்வையற்ற முதியவர் மீட்பு

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான் முஷபராபாத் பகுதியில் பூகம்பம் ஏற்பட்டு எண்பது மணித்தியாலங்களின் பின் பார்வையற்ற எழுபது வயதுடைய முதியவர் ஒருவர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளார். மீட்பு நடவடிக்கைகளில்; ஈடுபட்டிருந்த இங்கிலாந்து மீட்புக்குழுவினர் இவரை மீட்டுள்ளனர்.

இவரது உறவினர்கள் யாவரும் பூகம்பத்தில் பலியாகி விட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.இடிந்து கிடந்த வீடொன்றில் தேடுதல் பணியில் ஈடுபட்டபோது உள்ளேஇருந்து ஒருவரின் சத்தம் கேட்டுள்ளது. உடனே மீட்புப் படையினர் துரிதமாக மீட்புப் பணியில் ஈடுபட்டனர். நவீன தொழில் நுட்பத்தின் மூலம் இடிபாடுகளுக்குள் துளையை ஏற்படுத்தி உள்ளேபுகுந்தனர். கட்டடத்திற்குள் ஒரு தூணின்அடியில் புதைந்து கிடந்த இந்த முதியவரை உயிருடன் மீட்டனர்.



பாகிஸ்தானில் பூகம்பம் தாக்கிய பகுதியில் திறந்த வெளியில் பள்ளி மாணவர்களுக்கு கற்பித்தல் நடைபெறுகின்றது.




நேற்று முன்தினம் கிளிநொச்சிக்கு வருகை தந்த சர்வதேச மனித உரிமைகள் செயற்பாட்டாளர் இயன்மார்ட்டின் வடக்குக் கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தில்கலந்துரையாடலில் ஈடுபட்டிருப்பதையும் தமிழீழ காவற்துறை பொறுப்பாளருடன் கருத்துப் பரிமாறலில் ஈடுபட்டிருப்பதையும் படங்களில் காணலாம்.

## இடநெருக்கடியுடன் இயங்கிவரும் முத்துஐயன்கட்டு வலதுகரை அ.த.க.பாடசாலை

(முத்துஐயன்கட்டு)

மு/முத்து ஐயன்கட்டு வலதுகரை அ.த.க பாடசாலை போதிய கட்டட வசதிகள் இன்மையால் பல சிரமங்களை எதிர்கொண்டு வருகிறது.

550 மாணவர்களுக்கு மேல் கல்வி பயிலும் மேற்படி பாடசாலையில் இரு நிரந்தரக்கட்டடங்களே தற்போது உள்ளன. தரம் ஒன்று தொடக்கம் தரம் 13 வரையுள்ள இப்பாடசாலையில் பல வகுப்புக்கள் அருகில் உள்ள மரநிழலில் இயங்கி வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

தற்போது மழைகாலம் ஆரம்பித்துள்ளதால் பாடசாலையினை இடவசதிகளின்றி இயக்குவது மிகவும் சிரமமாகவிருக்கிறது என பாடசாலை நிர்வாகத்தினர் தெரிவிக்கின்றனர். பாடசாலை வகுப்பறை இடநெருக்கடியைப் பூர்த்தியாக்கும் முகமாக அமைக்கப்பட்டிருந்த நிரந்தர கட்டடம் ஒன்று ஒருவருடத்திற்கு மேலாக கட்டிமுடிக்கப்படாதுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## மீளக்குடியமர்ந்த மக்கள் நிவாரணமின்றி அவலம்

(மன்னார்)

இராணுவ நடவடிக்கையின் போது மன்னார் மடுவீதி தம்பன்னா குளம் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து வெவ்வேறு இடங்களில் வாழ்ந்து வந்த அந்த மக்களை மீளக் குடியமர்த்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. யு.என்.டி.பி, யு.என்.எச்.சி.ஆர்,சோஆ மற்றும் மன்னார் அரச செயலகம் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. மீளக் குடியமருவதற்கென்று இவர்களுக்கு அவர்களின் சொந்தக் கிராமத்திலேயே தற்காலிக கொட்டகைகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. தற்போது இந்தக் கிராமத்தில் 68 குடும்பங்கள் மீளக் குடியமர்ந்துள்ளன. இப்பகுதியில் குடியமர்ந்துள்ளவர்கள் கருத்துத்தெரிவிக்கும் போது தம்மை மீளக் குடியமர்த்தியது தமக்கு சந்தோஷமாக இருக்கின்ற போதும் தொழில் வாய்ப்புக்கள் இல்லாமையும் போதிய அளவு குடிநீர் இல்லாமையும் கடந்த மூன்று மாதமாக நிவாரணம் வழங்காமையும் தமக்குப்பெரும் பிரச்சினையாக இருப்பதாக தெரிவித்துள்ளனர். (21)

## நுண்கலைக்கல்லூரிகளுக்கிடையேயான கலைத்திறன் போட்டி முடிவுகள்

(முல்லைத்தீவு)

**முள்ளியவளை நுண்கலைக்கல்லூரி, புதுக்குடியிருப்பு நுண்கலைக்கல்லூரி, மல்லாவி நுண்கலைக்கல்லூரி ஆகியவற்றுக்கிடையில் 2ஆம் லெப். மாலதியின் நினைவாக நடாத்தப்பட்ட கவிதை, கட்டுரை பேச்சுப்போட்டிகளின் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன.**

கட்டுரை

கீழ்ப்பிரிவு யோ.கௌசிகா-நிலை-01-மல்லாவி நுண்கலைக்கல்லூரி, மத்தியபிரிவு- ச.துவாரகா-நிலை 01-மல்லாவி நுண்கலைக்கல்லூரி, யோ.உஷாந்தினி நிலை 02-புதுக்குடியிருப்பு, மேற்பிரிவு-ச.சுபசங்கர்-நிலை 01- மல்லாவி.

பேச்சு

கீழ்ப்பிரிவு சு.மதுஜா நிலை 01 -மல்லாவி நுண்கலைக்கல்லூரி, ஜெ.ஆன்றொசானா நிலை-02 புதுக்குடியிருப்பு நுண்கலைக்கல்லூரி, மத்தியபிரிவு ச.துவாரகா நிலை-01-மல்லாவி நுண்கலைக்கல்லூரி.

கவிதை

மத்தியபிரிவு ந.தரண்யா நிலை 01-முள்ளியவளை நுண்கலைக்கல்லூரி, இ.தர்சானந்தி நிலை-02 புதுக்குடியிருப்பு நுண்கலைக்கல்லூரி, மா.உமாறமணி நிலை-02- மல்லாவி நுண்கலைக்கல்லூரி, மேற்பிரிவு கோ.கோசலா நிலை 01- முள்ளியவளை நுண்கலைக்கல்லூரி, சி.ஜிந்தா நிலை-02 மல்லாவி நுண்கலைக்கல்லூரி.

இப்போட்டிகள் முல்லை.மாவட்ட அன்னையர் முன்னணியின் அனுசரணையுடன் நடாத்தப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

## சுயதொழில் முயற்சிக்கான கடனுதவி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்தினால் யு.என்.டி.பி நிறுவனத்தின் உதவியுடன் சுயதொழில் முயற்சிக்கான கடனுதவி வழங்கும் நிகழ்வு கடந்த செவ்வாயன்று மாசார் பொது மண்டபத்தில் பெ.அ.பு.நிறுவன இணைப்பாளரின் ஒழுங்குபடுத்தலில் திட்டஇணைப்பாளர் வி.ஜெஸ்பின் தலைமையில் நடைபெற்றது. இதில் பெ.அ.பு.நிறுவன கிளிநொச்சி மாவட்ட பணிப்பாளர் மா.வினோ, கிராமஅலுவலர், யு.என். .டி.பி பிரதிநிதி போன்றோர் திட்டசெயற்பாடு தொடர்பான கருத்துக்களை பகிர்ந்ததுடன் மாசார் கிராமத்தில் 40 பயனாளிகளுக்கு விவசாயம், கால்நடை வளர்ப்பு, வியாபாரம் போன்ற தொழில்களுக்கு ஆறு இலட்சத்து 45 ஆயிரம் ரூபா நிதி கடனாக வழங்கப்பட்டது. இந் நிகழ்வில் பெ.அ.பு. நிறுவன முதன்மைச்செயலகப் பணிப்பாளர் திட்டப்பணிப்பாளர், பனை அபிவிருத்தி சபை உத்தியோகத்தர், கிராமஅபிவிருத்திச்சங்கம், மாதர்சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## "பொங்குதமிழ்" நூல் வெளியீட்டுவிழா

(புதுக்குடியிருப்பு)

ஐ.பி.சி.செய்தியாளர் கனகரவியின் பொங்குதமிழ் நூல்வெளியீட்டு விழா இன்று பிற்பகல் மூன்று மணிக்கு புதுக்குடியிருப்பு மத்தியகல்லூரி கலையரங்கத்தில் நடைபெறவுள்ளது.

## த.தே. தொலைக்காட்சி சேவையின் தொடர்பகம் முல்லையில் திறப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் தமிழீழ தேசியத்தொலைக்காட்சி சேவையின் தொடர்பகமும் தொலைக்காட்சிக்கான அன்ரனா விற்பனைநிலையமும் நேற்றுமுன்தினம் காலை 10.30 மணிக்கு முல்லைத்தீவு பேருந்து நிலையத்திற்கு அருகாமையில் திறந்து வைக்கப்பட்டது.

தமிழீழத்தேசியத்தொலைக்காட்சி சேவையின் தொடர்பகப்பொறுப்பாளர் தமிழன் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் மங்கல விளக்கினை மாவீரர் கடற்கரும்புலி நல்லமுத்துவின் சகோதரர் சிவம் ஏற்றினார்.

நிறுவனப்பெயர்ப்பலகையினை கடற்புலிகளின் முல்லை மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் ம.ரங் கன் திரை நீக்கம் செய்துவைத்தார்..

தொடர்பகத்தை முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தலைவர் அ.மரியராசா திறந்து வைத்தார்.

தொடர்ந்து அன்ரனாவினை முதலாவதாக சின்னத்தம்பி அவர்களுக்கு முல்லை மாவட்ட க.தொ.கூ. சங்கசமாசப் பொதுமுகாமையாளர் சிவலிங்கம் வழங்கினார். இந்நிகழ்வில் முல்லை மக்கள் க.தொ.கூ.ச. சமாசத்தலைவர், பணியாளர்கள், கிளைச்சங்கபிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (20)

## வீட்டுத்தோட்ட பயனாளிகளுக்கு விவசாய உள்ளீடுகள் வழங்கல்

(கிளிநொச்சி)

தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் யூ.என்எச்.சி.ஆர், போருட் நிறுவன நிதியுதவியுடன் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் உருத்திரபுரீஸ்வரக் கிராமத்தில் வீட்டுத்தோட்டச் செய்கை பயனாளிகளுக்கு விவசாய உள்ளீடுகள் வழங்கப்பட்டுள்ளன. இதில் நான்கு தெளிகருவியும், நான்கு நீர் இறைக்கும் இயந்திரங்களும் அதற்கான விதைதானியமும், பசளையும் நேற்று முன்தினம் 11.00 மணிக்கு அகதிகள் புனர்வாழ்வு நிறுவன மண்டபத்தில் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் செந்தூரன் முன்பள்ளி மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழகத்திற்கு பாடநூல்கள் என்பன வழங்கப்பட்டன.

## சிறார்களின் கலைவிழா

(கிளிநொச்சி)

மேஜர் முரளி முன்பள்ளிச் சிறார்களின் கலைவிழாநிகழ்வு நாளை பிற்பகல் 1.30 மணியளவில் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## சர்வதேச முதியோர் செயலாற்றுகை விழா

(திருமலை)

சர்வதேச முதியோர் விசேட செயலாற்றலுடையவர்கள் தினவிழா 2005 நேற்று முன்தினம் வியாழக்கிழமை திருகோணமலை நகர மண்டபத்தில் திருகோணமலைப்பட்டணமும் சூழலும் பிரதேச செயலகத்தால் நடாத்தப்பட்டது. திருமலை பிரதேச உதவி செயலாளர் திருமதி எஸ். ஜலதீபன் தலைமைவகித்தார். பிரதம விருந்தினராக மாகாண புனர்வாழ்வு நலத்துறை, மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் வி.எஸ் சுவாமிநாதன், சிறப்பு விருந்தினராக மாகாண புனர்வாழ்வு திணைக்களப்பணிப்பாளர் ஏ.லக்கதாஸ், விசேட விருந்தினராக உதவிக்கல்விப்பணிப்பாளர் எஸ்.பாலசிங்கம் ஆகியோர் பங்குபற்றினர். உதவிப்பிரதேச செயலர் திருமதி ஜலதீபன், " நாட்டில் பத்து சதவீதமானோர் முதியோர்களாக உள்ளனர். குழந்தைகள் முதியோர்களை நன்கு பேணிப்பாதுகாக்க வேண்டும் அவ்வாறு இளந்தலைமுறையினர் நடப்பின் முதியோர் பராமரிப்பு இல்லங்கள் உருவாகும் நிலை தோன்றாது" என்று தெரிவித்தார். பிரதம அதிதி சுவாமிநாதன் பேசும்போது "முதியோர்களின் அனுபவத்தை இளம் தலைமுறையினர் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் முதியோர்கள் தங்கள் வாழ்நாள் முடிந்து விட்டது என்று எண்ணக் கூடாது இனித்தான் வாழ்வு என்றசலியாத மனதுடன் சமூகத்திற்கு உதவ வேண்டும"என்று குறிப்பிட்டார். அதிதிகளான பணிப்பாளர் லக்கதாஸ், உதவிக்கல்விப்பணிப்பாளர் பாலசிங்கம் ஆகியோரும் உரையாற்றினர். முதியோர் கௌரவிப்பு,விசேட தேவைக்குரியவர் கௌரவிப்பு, முதியோர் தினப்போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசுகள் வழங்கல் ஆகிய நிகழ்வுகளும் கலை நிகழ்வுகளும்இடம்பெற்றன. சமுர்த்தி முகாமையாளர் திருமதி கணேஸ் காந்தரூபி வரவேற்புரையும் சமூக சேவைகள் உத்தியோகத்தர் திருமதி க.பிரகலா நன்றியுரையும் நிகழ்த்தினர்(25)

## சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்கள் ஒரு தொகுதியினருக்கு படகு வழங்கல்

(முல்லைத்தீவு)

சுனாமியினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மீனவர்களில் ஒரு தொகுதியினருக்கு 55 படகுகள் வழங்கப்பட்டுள்ளன. கடந்த புதன் கிழமை நண்பகல் 11.45 மணிக்கு முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தில் இந் நிகழ்வு இடம் பெற்றது.

முல்லை.மாவட்ட க.தொ.கூ.ச சமாசத் தலைவர் அ.மரியராசா தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் மங்கல விளக்கினை கெயார் நிறுவனப் பிரதிநிதிகளான நெக்லஸ், கிறேசிசலி ஆகியோர் ஏற்றினார்கள்.

தமிழீழ தேசியக் கொடியினை முல்லைநகர தமிழீழ கடற்படைத் தளபதி க.தினேஷ் ஏற்றினார். தொடர்ந்து தலைமையுரையினை அடுத்து கருத்துக்களை தளபதி க.தினேஷ், கெயார் நிறுவன த்தைச் சேர்ந்த நெக்லஸ், கணேசலிங்கம், கிறேசிசலி ஆகியோர் வழங்கினர். (20)

## ஓட்டுநர், நடத்துநரின் முன்மாதிரியான செயற்பாடு

புதுக்குடியிருப்பிலிருந்து தாளையடியினூடாக முகமாலை செல்லும் பேருந்தின் நடத்துநர் அப்பேருந்தில் தவறவிடப்பட்ட கைக்சங்கிலியைக் கண்டெடுத்து தவறவிட்ட யுவதியிடம் ஒப்படைத்து முன்மாதிரியாகச் செயற்பட்டுள்ளார்.

மேற்படி சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது இப்பேருந்து கடந்த செவ்வாயன்று மாலை பரந்தனில் இருந்து புதுக்குடியிருப்பு சென்ற போது அப்பேருந்தில் வேலைக்குச் செல்லும் யுவதி ஒருவர் தனது கைச்சங்கிலியைத் தவறவிட்டுள்ளார். மறுநாள் யுவதி மேற்படி பேருந்து நடத்துநரிடம் கேட்டபோது நடத்துநரும், ஓட்டுநரும் மேற்படி கைச்சங்கிலியை வழங்கியுள்ளனர்.

## சர்வதேச உளநலதினத்தை முன்னிட்டு கிளிநொச்சியில் நிகழ்வுகள்

(கிளிநொச்சி)

சர்வதேச உளநலதினத்தை முன்னிட்டு நடாத்தப்படும் ஒருநாள் நிகழ்வுகள் இன்று நடைபெறவுள்ளன. காலை 8.00 மணியளவில் விளையாட்டுப் போட்டிகள் கிளி.மத்திய மைதானத்திலும் கலைநிகழ்வுகள் மாலை நான்கு மணிக்கு கருணாநிலைய மண்டபத்திலும் நடைபெறவுள்ளதென கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் உளநல வைத்தியர் யூடிஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

# அதிபர் சிவகடாட்சத்தின் கொலைக்கு பொது அமைப்புக்கள் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

**கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி அதிபர் நாட்டுப்பற்றாளர் ந.சிவகடாட்சம இராணுவபுலனாய்வுத்துறையினராலும் ஈ.பி.டி.பியினராலும் சுட்டுக்கொல்லப்பட்டதைக் கண்டித்து பல்வேறு பொது அமைப்புக்களும் யாழ்ப்பாணத்தில் கண்டன அறிக்கையை வெளியிட்டுள்ளன.**

இவர் மாணவர்களின் கல்வியில் மாத்திரமன்றி தேசவிடுதலையிலும் சமூக நலவளர்ச்சியிலும் பங்காற்றியுள்ளார்.தமிழீழ மக்களினால் நேசிக்கப்பட்ட பண்பாளனை தமிழ்தேசவிரோதிகளின் அராஜகச்செயல் பலிகொண்டு விட்டது. அன்னாரின் இழப்பு ஈடுசெய்ய முடியாதது. தேச விரோதிகளின் இந்த கொடூரச் செயலை முறியடிக்க மக்கள் அணிதிரள வேண்டும்.

யாழ்.மண்ணில் நடைபெற்ற பல எழுச்சி நிகழ்வுகளில் முன்னின்று பெரும் பணியாற்றிய ஆசான் தேச விரோதிகளின் கொடூரச் செயலினால் இன்று எம்முடன் இல்லை. ஆனால் இவரின் மறைவு இன்னும் எங்களை வீறுகொண்டு எழவைக்கும் என அந்த கண்டன அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கோப்பாய் பிரதேச தேசிய எழுச்சிப்பேரவை, அச்சுவேலிபிரதேச தேசிய எழுச்சிப்பேரவை, கோப்பாய் பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச சங்கம், கோப்பாய் ஐக்கிய விளையாட்டு கலாச்சாரகழகம், வலி.கிழக்கு மகளிர் அமைப்பு ஆகியன இந்த அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.

-இன்று முதல் பண்ணைப்பாலம் புனரமைப்பு

# மாற்று ஏற்பாடுகள் குறித்து யாழ். அரச அதிபர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பண்ணைப்பாலம் புனரமைக்கப்படவுள்ளதனால் இன்றிலிருந்து 30 ஆம் திகதிவரை இரண்டு வாரங்களுக்கு அதனூடாக போக்குவரத்து தற்காலிகமாக இடைநிறுத்தப்பட வேண்டிய தேவையிருக்கிறது. இதனால் அதற்கான மாற்று ஏற்பாடுக்ள் செய்வது தொடர்பாக ஆராயப்பட்டு பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன என்று யாழ்.மாவட்ட அரச அதிபர் அறிவித்துள்ளார்.

பண்ணைப்பாலத்தினூடான போக்குவரத்திற்கு படகுகள் சேவையில் ஈடுபடுத்தப்படும். பொதிகளை ஏற்றுவதற்கு விசேட படகுகள் ஒழுங்கு செய்யப்படும் என்பதுடன் கர்ப்பிணிகள், நோயாளர்களின் அவசரதேவைகளுக்கென இரவு நேரங்களில் பயன்படுத்துவதற்கென ஒரு படகு பிரத்தியேகமாக ஒழுங்கு செய்யப்படும். படகுகளில் பயணிகளை ஏற்றி இறக்கும் இடத்தை நேரில் சென்று பார்வையிட்டு முடிவு எடுப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

இப்படகுச் சேவையின் போது பிரயாணிகள் இலவசமாகச் செல்லக்கூடிய விதத்தில் இதற்கான கட்டணச்செலவு ஒப்பந்தக்காரரால் பொறுப்பேற்கப்படும். மேலதிக பொருட்கள், பொதிகளுடன் வருபவர்கள் அதற்கான கட்டணத்தைச் செலுத்தவேண்டும்.

பண்ணைப்பாலத்திற்கு அப்பால் ஊர்காவல்துறைப் பகுதிக்கான சேவைக்கென நான்கு இ.போ.ச. பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்படும். இதற்கான எரிபொருள் வேலணையில் களஞ்சிப்படுத்தப்படும்.

இ.போ.ச.பேருந்துகள் சேவையின் எண்ணிக்கையை அதிகரிக்காமல் ஏற்கனவே அதற்கென ஒதுக்கப்பட்ட நேர அட்டவணையின் படி சேவையில் ஈடுபடுத்தப்படும். அத்துடன் தனியார் பேருந்துகளும், வழமையான நேர அட்டவணையின் படி சேவையில் ஈடுபடும். தேவை ஏற்படும் பட்சத்தில் மாற்றம் செய்யப்படும். இதன்படி பண்ணைப்பாலத்தின் இரு பக்கங்களிலிருந்தும் காலை ஆறு மணிக்கு சேவை ஆரம்பிக்கப்படும்.

பாலத்திற்கு அப்பால் தீவுப்பகுதியில் சேவையில் ஈடுபடும் இறுதி இ.போ.ச. பேருந்து மாலை 7.00 மணிக்கு பண்ணைப்பாலப்பகுதிக்கு வந்தடைய வேண்டும்.

குறிகட்டுவான் வரை செல்லும் இ.போ.ச. பேருந்து பெருங்காட்டுப்பகுதியில் தரித்து விடப்படும்.

தற்போது தீவுப்பகுதியில் சேவையில் ஈடுபட்டுவரும் 20 தனியார் பேருந்துகளும் பாலத்தின் இரு பகுதிகளுக்கும் பிரித்து விடப்பட்டு சேவையில் ஈடுபடும்.

எழுவைதீவு, அனலை தீவு மக்களின் நலன்கருதி அம்மக்களை கல்லுண்டாய் வழியாக கடற்படையின் அனுமதியுடன் விடுவதற்கு ஒழுங்கு செய்யப்படும்.

பாலம் புனரமைப்பதற்கு தேவையான பொருட்களை அவ் இடத்திற்குச் சிரமமின்றி கொண்டு செல்வதற்குச் சம்பந்தப்பட்ட தரப்பினர் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என அவர் தெரிவித்தார்.

# யாழ்.மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் புதிய உந்துருளிகளின் பதிவினை மேற்கொள்ளலாம்

–யாழ்.மாவட்ட மோ.போ.வ.தி. உதவி ஆணையாளர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் விற்பனை செய்யப்படும் புதிய உந்துருளிகளின் பதிவானது யாழ்.மாவட்ட மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டு வருவதாக யாழ்.மாவட்ட மோட்டார் போக்குவரத்து திணைக்கள உதவிஆணையாளர் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் கொள்வனவு செய்யப்படும் புதிய உந்துருளிகளை மோட்டார் போக்குவரத்துதிணைக்களத்தில் பதிவுசெய்வதன் மூலம் உரிமையாளர்களும் மற்றும் இவ் வாகனங்களை உடமை மாற்றம் செய்யுமிடத்து அதன் புதிய உரிமையாளர்களும் பல நன்மையைப் பெற்றுக் கொள்ளலாம்.

புதிய பதிவிற்காக விண்ணப்பித்து வாகனப்பரிசோதனை செய்த திகதியிலிருந்து ஐந்து வேலைநாட்களுக்குள் வாகனப்பதிவுச்சான்றிதழ், வாகன அடையாள அட்டை, வாகன இலக்கத்தகடு ஆகியவற்றை இத்திணைக்களத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

இத்திணைக்களத்திலேயே பதிவு செய்யப்படும் வாகனங்களின் ஆவணங்கள் பேணப்படுவதால், வாகனப் பதிவுச் சான்றிதழ், வாகன அடையாள அட்டை தொலையுமிடத்து அதன் பிரதிகளைப் பெறுதல், பதிவுச் சான்றிதழில் மாற்றங்கள் மேற்கொள்ளல், வாகனத்தின் விபரங்களைப் பெறுதல் ஆகிய செயற்பாடுகளை இத்திணைக்களத்திலேயே விண்ணப்பித்து உடன் பெற்றுக் கொள்ள முடியும்.

இதன் போது ஆவணங்களை கொழும்புக்கு அனுப்பி பெறவேண்டிய நிலை இல்லாதிருப்பதுடன் பொது மக்கள் தமது சகல தேவைகளுக்கும் இத்திணைக்களத்துடனேயே தொடர்புகளை மேற்கொண்டால் மட்டும் போது மானதாக அமைகிறது.

இதேபோன்று மேற்படி வாகனங்களை உடமைமாற்றம் செய்யுமிடத்து அவ்வாகனங்களை புதிதாக கொள்வனவு செய்தவர்கள் தமது விண்ணப்பங்களை தமது பிரதேசச் செயலகம் ஊடாக அனுப்பிவைப்பதன் மூலம் வாகன உடமை மாற்றங்களை இத்திணைக்களத்திலேயே இலகுவாக மேற்கொள்ளமுடியும். இத்திணைக்களத்திற்குப் பிரதேச செயலகத்திலிருந்து விண்ணப்பங்கள் கிடைத்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்கு வாகனப்பதிவுச்சான்றிதழ், வாகன அடையாள அட்டை என்பனவற்றைப் பெற்றுக்கொள்ள முடியுமென அவர் தெரிவித்தார்.

# எதிர்வரும் சனாதிபதித் தேர்தல் வரலாற்று முக்கியத்துவமானது

-சட்டத்தரணிகள் அமைப்பு தெரிவிப்பு

எதிர்வரும் சனாதிபதித் தேர்தல் வரலாற்று முக்கியத்துவமானது என மனித உரிமைகள் மற்றும் அபிவிருத்தி தொடர்பான சட்டத்தரணிகளின் அமைப்பு தெரிவித்துள்ளது. சனாதிபதித்தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் நாட்டின் எதிர்காலம் தீர்மானிக்கப்படும் என அந்த அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கல்யாணந்த திராணகம தெரிவித்தார். சனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் இரண்டு பிரதான வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தை ஆராய்வதற்காக மக்கள் கலந்துரையாடல் ஒன்றை ஒழுங்கு செய்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# பிரதான கட்சிகளை ஒன்றிணைப்பதற்கு சங்கநாயக்கர்கள் முன்வரவேண்டும்

–எதிர்க்கட்சித்தலைவர் ரணில்

(கொழும்பு)

வடகிழக்கு இனப்பிரச்சினை சம்பந்தமாகவும், இந்நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு இரண்டு பிரதான கட்சிகளையும் ஒன்றிணைப்பதற்கு முழுமுயற்சிகளையும் எடுப்பதற்கு, இந்நாட்டில் உள்ள பிரதான சங்க நாயக்கர்கள் முன்வரவேண்டும் என எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இரண்டு கட்சிகளும் முக்கிய பிரச்சினைகளில் ஒன்றிணைந்து செயற்படாவிட்டால் பிரச்சினைகளுக்கு எக்காலத்திலும் தீர்வுகாண முடியாதென அவர் குறிப்பிட்டுள்ளார். இனப்பிரச்சினை தீர்வில் சனாதிபதி சந்திரிகாவும் நாங்களும் ஒரே கருத்தினைக் கொண்டுள்ளோம் என அவர் மகாநாயக்கர்களிடம் கூறியுள்ளார்.

# பொலிசாரின் இடமாற்றங்கள் தேர்தல் முடியும்வரை இரத்து

-தேசிய பொலிஸ் ஆணைக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

தேர்தல் காலங்களில் அரசியல் பழிவாங்கல்கள் சம்பந்தமாக பொலிஸ் உத்தியோகத்தர்களின் மாற்றங்கள் முற்றாக இரத்துச்செய்யப்பட்டுள்ளதாக தேசிய பொலிஸ் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அரசியல் வாதிகளின் தலையீடுகளினால் சில பொலிஸ் அதிகாரிகளை மாற்றம் செய்வதற்கு பொலிஸ் திணைக்களம் தீர்மானித்திருப்பதால் பொலிஸ் ஆணைக்குழு இத்தீர்மானத்தை எடுத்துள்ளது.

தேர்தல் நடக்கும் காலங்களில் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரிகளை மாற்றுவதற்கு தேசிய பொலிஸ் ஆணைக்குழு முற்றாக எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

# வேட்பாளர்களுக்குச் சார்பான செய்திகள் பிரசுரிப்பது தவிர்க்கப்படல் வேண்டும்

-தேர்தல் ஆணையாளர்

(கொழும்பு)

தேர்தல் முடிவுறும் வரை வேட்பாளர்களுக்குப் பக்கச்சார்பாக செய்திகளைப் பிரசுரிப்பது தவிர்க்கப்பட வேண்டுமென தேர்தல் ஆணையாளர் அச்சு ஊடகங்களுக்கு அறிவுறுத்தியுள்ளார். தேர்தல் ஆணையாளர் தயாணந்த திஸாநாயக்க அச்சு ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள வழிகாட்டல் அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

சனாதிபதித் தேர்தல் சுதந்திரமாகவும், நேர்மையாகவும் பாரபட்சமற்ற விதத்திலும் இடம்பெறுவதை உறுபடுத்துவதற்கும், தேர்தல் ஆணையாளருக்கு வழங்கப்பட்டுள்ள கடமைகளுக்கு ஏற்றவாறும் அரசியல் அமைப்பின் 17ஆவது திருத்தச்சட்ட மூலத்தின் 104ஆவது உறுப்புரிமைக்கமைய தயாரிக்கப்பட்ட வழிகாட்தலை அனைத்து அச்சு, ஊடகமும் பின்பற்றவேண்டுமெனவும் அவர் கூறியுள்ளார்.

வேட்பாளர் ஒருவருக்கு பக்கச்சார்பான செய்திகள், நிகழ்சிகளை வெளியிடுவதை அச்சு ஊடகங்கள் தவிர்க்க வேண்டுமெனவும் தேர்தல் ஆணையாளர் தயாணந்த திஸாநாயக்க மேலும் தெரிவித்தார்.

# பயிற்சிப்பட்டறை

(அலுவலக செய்தியாளர்)

பெண்களும் அபிவிருத்தியும் எனும் தலைப்பில் பயிற்சிப்பட்டறை நாளை முதல் 18ஆம் திகதி வரை தமிழர் புனர்வாழ்வுக் கழக தலைமைச் செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகொட் நிறுவன் அனுசரணையுடன் மூன்று நாட்கள் நடைபெறவுள்ள மேற்படி பயிற்சிப்பட்டறையில் கிளி.மாவட்ட பெண்கள் அமைப்புகள் மற்றும் மாதர்சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# பிரதித் தலைமை அதிகாரி நியமனம்

(கொழும்பு)

சிறிலங்கா வான்படைக்கு முதன்முறையாக நேற்று முன்தினம் முதல் பிரதித் தலைமை அதிகாரி எயார் வைஸ்மார்ஷல் ரொசான் குணதிலக்க நியமிக்கப் பட்டுள்ளார்.இது சிறிலங்கா வான்படை வரலாற்றில் முதன் முறையாக மேற் கொள்ளப்பட்ட நடவடிக்கையாகும். ஏற்கனவே சிறிலங்கா கடற் படைக்கு முதல தடவையாக பிரதித்தலைமை அதிகாரியாக அட்மிரல் சரத் வீரசேகர நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மாகாணமட்ட பொதுப்பரீட்சைக்கு மாணவர்களை தயார்படுத்துவதற்கான முன்னோடி வகுப்புக்கள்

(வவுனியா செய்தியாளர்)

எதிர்வரும் நவம்பர் மாத நடுப்பகுதியில் நடைபெறவுள்ள மாகாணமட்ட பொதுப்பரீட்சைக்கு தரம்-9 மாணவர்களைத் தயார்ப்படுத்துவதற்கான முன்னோடி வகுப்புக்களை கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலகம் நடாத்தி வருகின்றது. கிளிநொச்சி கல்வி வலயத்திற்குட்பட்ட தரம்-9 வகுப்புக்களைக் கொண்ட பாடசாலைகளை இணைத்து பத்து நிலையங்களில் இம் முன்னோடிச் செயலமர்வுகள் நடைபெற்று வருகின்றன. இச்செயலமர்வுகளில் ஆறு பிரதான பாடங்களில் மாணவர்கள் தயார்படுத்தப்பட்டு வருகின்றனர். (10)

# விஞ்ஞான விளக்கங்கள்

1.புகைப்பவரும், புகைப்பவருக்கு அருகில் உள்ளவரும் பாதிப்புக்குள்ளாகின்றனர்.

□ புகைக்கும்போது சிகடிரட்டிலிருந்து நிக்கட்டின் போன்றவை வெளியேற்றப்படுகின்றன. இவற்றால் புகைப்பவரும் அருகில் உள்ளவரும் இந்த நச்சுப் பொருட்களைச் சேர்த்தே சுவாசிப்பதால் சுவாசப்பையில் பாதிப்பு ஏற்பட்டு சுவாசப் புற்று நோய் ஏற்பட வாய்ப்பு உண்டா கின்றது.

2.பிறந்த குழந்தையை அழச் செய்வதன் நோக்கம்.

□ பிறந்தவுடன் குழந்தையின் சுவாசப்பையின் இயக்கம் சீராக நடைபெறுவதில்லை குழந்தையை அழச் செய்கின்றபோது சுவாசப்பை சுருங்கித் தளர்ந்து சுவாசப்பையின் இயக்கம் சீர்படுத்தப்படுகின்றது.

3.கோடை காலங்களிலும் மண் கூசாவிலுள்ள, நீர் குளிர்ச்சியாகக் காணப்படுகின்றது.

□ மண் கூசாவினுள் நுண்துவாரங்கள் காணப்படுகின்றன. இதன் ஊடாக வெளியேறும் நீர்த்துளிகள் ஆவியாக மாறுவதற்குத் தேவையான வெப்பத்தினை கூசாவிலுள்ள நீரிலிருந்து பெற்றுக் கொள்வதால் நீர் குளிர்கின்றது.

4. தேகப் பயிற்சி செய்த ஒருவரின் உடல் மேற்பரப்பு குளிர்ச்சியாக இருக்கும்.

□ தேகப் பயிற்சி செய்யும் போது வியர்வை வெளியேறும். வியர்வையை ஆவியாக்குவதற்கு உடலிலுள்ள வெப்பம் பயன்படுத்தப்படுவதால் உடலில் மேற்பரப்பு குளிர்ச்சி அடைகின்றது.

5. சாதாரண நாட்களை விட மழை நாட்களில் அதிகளவாக சிறுநீர் வெளியேறுகின்றது.

□ மழை நாட்களில் வியர்வைச் சுரப்பிகள் சுருங்குவதால் வியர்வையாக வெளியேற்றப்படும் நீரும் சிறுநீர் ஊடாகவே வெளியேற்றப்படுகின்றது இதனால் சிறுநீர் அளவு அதிகரிக்கப்படுகின்றது.

6. விளையாட்டு ஆரம்பிக்கப்படும் முன்னர் விளையாட்டு வீரர்களுக்கு குளுக்கோஸ் கொடுக்கப்படுகின்றது.

□ குளுக்கோஸ் சமிபாடடையத் தேவையில்லை. அது நேரடியாக உறிஞ்சப்படுகின்றது. எனவே கலங்கள் உடனடியாக சுவாசத்தை மேற்கொண்டு தேவையான சக்தியைப் பிறப்பிக்கும்.

7. பெண்களுக்கு இரட்டைக் குழந்தைகள் அரிதாகவே பிறக்கின்றன.

□ வழமையாக மாதமொன்றுக்கு ஒரு சூல் மட்டுமே வெளியிடப்படும். விந்துக் கலங்கள் எத்தனை சென்றாலும் ஒரு முளையம் மட்டுமே உருவாகும்

8. பாம்பு தன் தலையைவிட பெரிய தவளையை முழுமையாக விழுங்குகிறது.

□ பாம்பின் வாய் மிக அகலமாகத் திறக்கக் கூடியதாக இருப்பதால் தன் தலையை விடப் பெரிய தவளையை விழுங்கக் கூடியதாகவுள்ளது.

9.மனிதர்கள் பாரமான மூடைகளைத் தலையில் சுமப்பதைத் தவிர்த்து முதுகில் சுமந்து செல்வர்.

□ தலையின் பரப்பு குறைவு அமுக்கம் கூட. ஆனால் முதுகு தலையை விட பரப்புக் கூட இதனால் அமுக்கமும் குறைவு. ஆகவே பாரம் இலகுவாக உணரப்படும்.

10. சில உருளைக் கிழங்கின் மேற்பாகத்தில் பச்சை நிறம் காணப்படும்.

□ கிழங்கு மண்ணினால் மூடப்படாது அதன் ஒரு பகுதி வெளியே ஒளிக்குத் திறந்திருந்தால் ஒளி படும் இடத்தில் குளோரோபில் அதாவது பச்சையம் தொகுக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

11. எரியும் சிமினி விளக்கில் நீர்பட்டால் வெடிப்பு உண்டாகிறது.

□ நீர் பட்ட இடம் மட்டும் உடன் சுருங்குவதால் கண்ணடியில் வெடிப்பு ஏற்படுகின்றது.

12. உணவு உண்டபின் குளிப்பது ஆரோக்கியமானதல்ல.

□ நீராடுவதன் காரணமாக உடல் வெப்பநிலை குறைவடையும். இதனால் நொதியத் தாக்கத்திற்கு ஏற்ற வெப்பநிலை கிடைக்காததனால் நொதியத் தொழிற்பாடு குறைவடையும். இதனால் உணவு சமிபாடு குறையும்.

13.மின்சாரம் வழங்கப்படுகையில் பியூஸ் இணைக்கப்படுகின்றது.

□ சில வேளைகளில் மின்சாரம் குறுக்குச் சுற்று ஏற்படும் போது இந்த பியூஸ் வயர்கள் தாமாக உருகி மின் விநியோகத்தைத் தடைசெய்கின்றன.

14. ஆடையில் நெருப்புப் பிடித்தால் ஓடக்கூடாது நிலத்தினில் விழுந்து உருள வேண்டும்.

□ ஓடுகின்றபோது ஒட்சிசன் வெளிப்படுவதால் மேலும் பற்றி எரியும். நிலத்தில் உருளுவதால் ஆடை நிலத்தில் படும் ஓட்சிசன் உள்ள வளிபடமாட்டாது.

15. சகதியான இடத்தில் பலகையை இட்டு அதன் மேல் நடப்பது உகந்தது.

□ சகதியான இடங்களில் கால்வைத்துச் செல்வோமாயின் கால் பாதத்தின் பரப்பளவு குறைவு என்பதால் கூடிய அமுக்கம் ஏற்பட கால் சேற்றில் புதையும் பலகையை இடும்போது சேற்றுடன் தொடுகையுறும் பரப்பளவு கூடுகிறது அதனால் அமுக்கம் குறைக்கப்படுகின்றது பலகை அதனால் சேற்றில் புதையமாட்டாது.

16. 'அபாயம்' என்பதை அறிவிப்பதற்காக சிவப்பு நிறங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

□ சிவப்பு நிறங்கள் மிக நீண்ட தூரத்துக்கு ஊடுருவிச் செல்லும் தன்மையுடையது. அதனால் சிவப்பு நிறங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

17. இரவு நேரத்தில் கடல் நீர் சூடாகக் காணப்படும்.

□ பகல் வேளையில் சூரிய ஒளியால் கிடைக்கும் வெப்பம் கடல் நீரினால் அகத்துறிஞ்சப்படுகின்றது. இரவு வேளையில் இவ் வெப்பம் வெளிவிடப்படுகின்றது.



இங்கு காணப்படுவது மேசையை சுத்தம் செய்யவும் வாடிக்கையாளரை மகிழ்விக்கவும் கூடிய இரு இயந்திர மனிதர்களாகும். ஒசாகாவில் முழுதும் றோபோக்களின் பணியினால் இயங்கும் தேநீர்சாலை மேசையில் இவை வைக்கப்பட்டுள்ளன.

# நிலக்கடலை

உலகம் முழுவதும் எளிதில் தங்குதடையின்றிக் கிடைக்கும் முக்கியமான ஊட்டச்சத்துள்ள உணவுப் பொருட்களுள் நிலக்கடலையும் ஒன்றாகும்.

நிலக்கடலையில் உள்ள புரதம் சரிவிகிதமாக அமைந்திருக்கிறது. எனவே குழந்தைகள் வளர்ச்சி தடையின்றி இருக்க நிலக்கடலை நல்லது. சோயா அவரைக்கு அடுத்து தரமான உயர்ந்த புரதம் நிலக்கடலையில்தான் இருக்கிறது. முட்டையில் இருக்கிறதைவிட இரண்டரை மடங்கு அதிகமான புரதம் வேர்க்கடலையில் இருக்கிறது.


மூளை சுறுசுறுப்பிற்கு உதவும் பொஸ்பரஸ், உப்பு,பற்கள் மற்றும் எலும்புகளின் பலத்திற்கு கல்சியம், இரும்புச்சத்து, விற்றமின் ஈ,நியாசின் போன்ற விற்றமின்களும் நிலக்கடலையில் உள்ளன.

எல்லாவிதமான இரத்தப்போக்குகளையும் தடுக்கும் சக்திவாய்ந்தது நிலக்கடலை.பெண்கள் மாதவிடாய்க் காலத்தில் சாப்பிட வேண்டிய உணவு நிலக்கடலையாகும்.


உடல் பருமன் உள்ளவர்களுக்கும், உணவைக்குறைத்து உடல் மெலிய விரும்புவர்களும், சாப்பாட்டு நேரத்திற்கு ஒரு மணித்தியாலத்திற்கு முன்பாக ஒரு கைப்பிடி அளவு வறுத்தநிலக்கடலை சாப்பிடவும். இத்துடன் சீனி சேர்க்காத கோப்பிஅல்லது தேநீர அருந்தவும் பிறகு ஒரு மணி நேரம் கழித்துச் சாப்பிட அமர்ந்தால் உணவை அதிக அளவில் சாப்பிடமுடியாது. இதன் பொருட்டு உடல் எடையும் படிப்படியாகக் குறைய ஆரம்பிக்கும். வயிற்றுப் போக்கு உடனே கட்டுப்படவும், பற்கள் பலம்பெறவும் நிலக் கடலை சாப்பிடுவது நல்லது நிலக்கடலையில் உள்ள நியோசின் தோலில் உள்ள புண்கள், கொப்புளங்கள் ஆறவும் இவை வராமல் முன்கூட்டியே தடுப்பதுடன் பளபளப்பான தோலையும் ஏற்டுத்தித் தருகிறது. எந்த வயதுக்காரரும் தினமும் அதிகபட்சம் 50 கிராம்வரை சாப்பிட்டால் செயலாற்றல் மிக்க மருந்தாக நிலக்கடலை செயற்படும். நிலக்கடலையை அளவோடு சாப்பிடுவது நல்லது. அதிகமாகச் சாப்பிட்டால் வயிற்றுக கோளாறுகள் வரும் நெஞ்செரிச்சல் போன்றவை ஏற்படும். கல்லீரல் கோளாறு, மஞ்சள் காமாலை நோய் முதலியவை இருந்தால், நோய் குணமாக நிலக்கடலை சாப்பிட வேண்டும். நீரிழிவு, உள்ளவர் கள் கொலஸ்ட்ரோல் தொந்தரவு உள்ளவர்கள் நெருங்கக் கூடாத பொருள் இந்த நிலக்கடலையாகும்.




ஜப்பானிலுள்ள கன்டோ முச்சக்கர வண்டி உற்பத்தி நிறுவத்தால் தயாரிக்கப்பட்ட சக்கர நாற்காலி. இதன் உதவயுடன் கரடுமுரடான பாதையிலும் கடற்கரை மணலிலும் செல்லலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. பட்ராபோ எனப்படும் இக்கதிரை மின்சாரத்தின் உதவியினால் இயக்கப்படுவதாகும்.



வித்துக்கள் முளைவிடுதல் பற்றி பல்வேறு விதமான விஞ்ஞான விளக்கங்கள் தெரிவிக்கப்படுகின்றன. ஆயினும் படத்தில் காணப்படுவது வித்தொன்று முளைக்கும்போது மேலும் ஒரு வித்தை உற்பத்திசெய்வது போன்று காட்சியளிக்கின்றது.



இங்கு காணப்படுவது மின்சக்தியில் இயக்கப்படும் முச்சக்கரவண்டியாகும். ஜப்பானில் தயாரிக்கப்பட்ட இவ்வாகனம "பைவோ" எனப் பெயரிடப்பட்டுள்ளது. இது விரைவில் ரோக்கியோவில் நடைபெறவிருக்கும் வாகனக்கண் காட்சியில் பார்வைக்கு வைக்கப்படும்.



புற்று நோய்க்கலங்கள் உடலில் பரவும் படிப்படியான முறைபற்றி கண்டறியப் பட்டுள்ளது. இங்கு காணப்படும் கலம் ஒன்று நகர்வதை படம் காட்டுகிறது.

# பாடசாலை மட்டக்கணிப்பீட்டுத்திட்டமும் அதை நடைமுறைப்படுத்துவதில் எதிர் நோக்கும் சவால்களும்

இன்றைய கல்வி முறையானது பாரம்பரியமாகப்பின்பற்றப்பட்டு வந்த ஆசிரியரை மையமாகக் கொண்ட பரீட்சையை மட்டும் மையமாகக்கொண்ட கற்றல் கற்பித்தல் செயல் முறையிலிருந்து விலகி மாணவர்களின் தேவையை உணர்ந்த மாணவர்களை மையமாகக்கொண்டதாக அமைந்துள்ளது. முன்னைய பரீட்சை மையக்கல்வியில் பிள்ளைக்கு விருப்பமோ, விருப்பமில்லையோ பாடப்பரப்பு விளங்குகின்றதோ, விளங்கவில்லையோ தேவையோ, தேவையில்லையோ அவற்றைக் கவனத்தில்கொள்ளாது வகுப்பறையை நடாத்தி முடிக்கும் நிலை காணப்பட்டது.. ஆசிரியன் கலைத் திட்டத்திற்குக் கட்டுப்பட்டவனாக நிர்ப்பந்திக் கப்பட்டவனாக காணப்பட்டான்.

ஒருவனுக்குக் கிடைக்கும் கல்வியானது அவனை சமூகத்திற்குப் பொருத்தமான பூரணமனிதனாக்குதல் வேண்டும் இதன் மூலம் 1) அடிப்படை அறிவுடையவனாக

2) பொருளாதார வளமிக்கவனாக

3) சமூக நீதியுணர்வுமிக்கவனாக

4) நாட்டின் நற்பிரஜையாக

உருவாக்குவது கல்வியாகும். எனினும் இதுவரை இருந்து வருகின்ற பரீட்சை அமைப்பானது அறிவைமட்டும் அளவிடுவதோடு நின்று விடுகின்றது. அந்த அறிவும் குறிப்பிட்ட பாடவிதானத்திற்குள் மட்டுப்படுத்தப்பட்டதாக காணப்படுகிறது. இ[illegible]னால் அறிவுடையவர்கள் மட்டும் உருவா[illegible]கப்பட, ஏனையதிறன்களோ மனப்பாங்கு விருத்தியோ, ஏற்படுத்தப்படாமலே, பாடசாலைக் கல்வியை நிறைவேற்றியவர்களாக வெளியேறி னர். எழுத்துப்பரீட்சையின் மூலம் உயர்தகைமை சான்றிதழ்களைப் பெற்றபலரும் உயர்பதவிகளைப் பெற்றுக் கொண்டு தானுண்டு தன் தொழிலுண்டு என வாழலாயினர். ஏனையோர் நட்டாற்றில் விடப்பட்டவர்களாக வேலையுலகிற்கு தயாரற்றவர்களாக சமூகத்தில் தோன்றுகின்ற சவால்களுக்கு முகம் கொடுக்க இயலாதவர்களாக பிரச்சினைகளை கண்டு அஞ்சுபவர்களாக சிறிய பிரச்சினைகளையும் பெரிதாக்கி விடுபவர்களாக என பல்வேறுபட்ட சமூக சீரின்மைக்கு காரணமானவர்களாயினர்.

கல்வியில் சீர்திருத்தங்களை கொண்டு வந்ததன் மூலம் மாணவரிடையே தேர்ச்சி தழுவிய மாணவர் மையக்கல்வி (COMPETENTY BASED CHILD CENTRED EDUCATION) ஏற்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதாவது கற்றல், கற்பித்தல் செயற்பாட்டின்போது அறிவு, மனப்பாங்கு, திறன் என்பவற்றை வெவ்வேறாக விருத்தி செய்ய முற்படாது அம்மூன்றினது ஒன்றிணைப்பான தேர்ச்சியை விருத்தி செய்ய வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. கற்றல், கற்பித்தல் செயற்பாட்டின் போது கணிப்பீட்டினை அறிமுகப்படுத்துவதற்காக 1990 களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில்

- ✶ இடைவிலகியோர் 47%
- ✶ மீளக்கற்போர் 0.4%
- ✶ தேசிய பரீட்சை முடிவுகளின் வியத்தகு வீழ்ச்சி
- ✶ வேலை உலகிற்கு பொருத்தமற்ற மாணவர் சமுதாயம்
- ✶ உளவிருத்தி குணாதிசயவிருத்தி/ வினைத்திறன் விருத்தி கலாச்சார விருத்தி சமூக விழுமியங்கள் என்பன எய்தப்படாத நிலை (பண்பு சார் விருத்திகள்)

என்பன பாடசாலை மட்டக் கணிப்பீட்டுத் திட்டத்தைநடைமுறைப்படுத்துவதற்கு காரணங்களாக அமைந்தன.

கணிப்பீடு என்ற எண்ணக்கரு:

மாணவர்கள் கற்றலில் ஈடுபட்டிருக்கின்ற சந்தர்ப்பங்களில் அவர்களின் அருகிலிருந்து கற்கும் ஆற்றலையும் இயலாமையினையையும் ஆசிரியர் அடிக்கடி தேடிப்பார்த்து ஆற்றலைத்தட்டிக் கொடுத்து இயலாமைக்கு வழிகாட்டி எதிர்பார்க்கின்ற தேர்ச்சி மட்டத்திற்கு மாணவரை இட்டுச் செல்வதையும் அவர்களிடையே சமநிலை ஆளுமைவிருத்தி ஏற்படுவதையும் இலக்காகக் கொண்ட செயற்பாடே பாடசாலைமட்டக் கணிப்பீடாகும்

இங்கு ஆசிரியனானவன் தான் கற்பிக்கும் அலகு ஒவ்வொன்றினதும் செயலொழுங்கிலும்

- ✶ மாணவனால் இயன்றவை யாவை?
- ✶ இயலாதவை யாவை?
- ✶ அவர்கள் ஆணுகியுள்ள மட்டம் எது?
- ✶ எதிர்பார்க்கப்படும் மட்டத்தை அணுகுவதற்கு தடையாகவுள்ள அவர்களின் பல வீனங்கள் எப்படிப்பட்டவை?
- ✶ எதிர்பார்க்கும் மட்டத்திற்கு மாணவரைக் கொண்டு செல்ல அவர்களிடம் உள்ள எவ்வாறான திறமைகளைப் பயன்படுத்தலாம்?

போன்ற கள நிலையினை நன்கறிந்து தொழிற்பட வேண்டியவனாகின்றான்.

மாணவரின் கற்றல் அடைவு நிலையை கணிப்பீடு செய்வதற்காக எழுத்துப்பரீட்சைக்குப் புறம்பாக பல்வேறு வகையான கணிப்பீட்டுக் கருவிகள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன இவற்றின் மூலம் மாணவர்கள் குழுக்களாகவும், தனித்தும் தொழிற்படுகின்றனர் இவை மூலம் அவர்களின்

- ✶ அறிதல் ஆட்சித்திறன்
- ✶ மனவெழுச்சிப் பண்புகள்
- ✶ உளவியக்கச் செயற்பாடுகள்
- ✶ சமூகமயத்திறன்கள்
- ✶ கற்றலோடு இணைந்த ஆளுமைப்பண்புகள்.

என்பன வளர்க்கப்பட்டு அடிப்படைத் தேர்ச்சிகளை எய்தலுக்கு வழிசெய்ய வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உதாரணமாக தமிழ்ப் பாடத்தில் செய்யுள் ஒன்றினை வழங்குவதன் ஊடாக மாணவரிடம் எதிர்பார்க்கப்படுவது முதலில் அச் செய்யுளை பிழையின்றி வாசிக்கக் கூடியவனாதல் அடுத்து அச்செய்யுளில் குறிப்பிடப்பட்ட கருத்துக்களை விளக்கிக் கொள்ளல் அடுத்து அச்செய்யுளை கருத்தூன்றி சந்தி பிரித்து வாசித்தல் அடுத்து அச் செய்யுளை .இசையோடு பாடும் திறனைப் பெறல், அச்செய்யுளை உரிய தாளலயத்தோடும் அபிநயத்தோடும் பாடும் ஆற்றலைப்பெறல் இறுதியில் இவ்வாறான செய்யுள்கள் ஆக்கும் திறனைப் பெறல், அத்தோடு இவை போன்ற செய்யுள்களை பொருத்தமான சந்தர்ப்பங்களில் தானாக முன்வந்து வெளிப்படுத்தல்.

இவையாவும் மாணவரிடம் ஏற்படுத்தப்படுமாயின் அவன் அவ்விடயம் தொடர்பான தேர்ச்சியை அடைந்தவனாகக்கருதப்படுவான். புதிய கல்விச் சீர்திருத்தத்தில் இத்தகைய தேர்ச்சியை நோக்கிய செயற்பாடு கற்றல் கற்பித்தல் கணிப்பீடு எனும் செயலொழுங்கில் எதிர்பார்க்கப்படுகிறது.

எனினும் பாடசாலைகளில் இத் தேர்ச்சியை நோக்கிய செயற்பாடு எதிர்பார்த்தளவிற்கு வெற்றியளிக்கவில்லை.

- ✶ வகுப்பறையில் அளவுக்கதிகமான மாணவர்கள் காணப்படல் (40-50 வரை)
- ✶ பாடத்திற்குப் பொருத்தமான ஆசிரியர் கள் போதுமானதாக இல்லாமை.
- ✶ அடிக்கடி ஆசிரியர்கள் இடமாற்றத் திற்குள்ளாதல்
- ✶ பாடசாலை பௌதிகவளங்கள் , வகுப்பறைகள் திருப்திகரமாக அமையாமை.

போன்ற காரணங்கள் ஒரு புற மிருக்க இல்லாத வளங்களைப் பற்றி கூறிக்கொள்ளும் அதே நேரத்தில் இருக்கின்ற வளங்களை உச்ச அளவில் பயன்படுத்தாமையும் காணப்படுகின்றது.

- ✶ கணிப்பீடு தொடர்பாக காலத் திற்குக்காலம் பல்வேறு செயலமர்வுகளும் கருத்தரங்குகளும் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட போதிலும் அங்கு கொடுக்கப் படும் அறிவுறுத்தல்களை பின்பற்றுவதில் ஆசிரியர்கள் ஆர்வம் உள்ளவர்களாக வேண்டும்.
- ✶ கணிப்பீடுகள் மேற்கொள்வதற்கான முன்திட்டங்கள் கணிப்பீட்டுத்திட்டங்கள் என்பன உரிய முறையில் தயாரிப்பதில் அதிக ஆர்வம் காட்ட வேண்டும்.
- ✶ கணிப்பீடுகள் வெவ்வேறு செயற் பாடுகளினூடாக (கருவிகள்) மேற்கொள்ளப் படினும் அவற்றிற்கான குறிக்கோள்களும் நியதிகளும் தாமாகவே ஆக்கிக் கொள்ள வேண்டும்.
- ✶ நியதிகளின் அடிப்படையில் நடைபெறும் கணிப்பீடு களினால் ஆசிரியர், மாணவர் செயற்பாடுகள் இலகுவாக்கப்படுகின்றன.
- ✶ அத்துடன் அவை ஏற்றுக் கொள்ளப் படும் தன்மையும் உயர் மட்டத்தில் காணப் படும்.
- ✶ அவ்வாறு அமையும் போதே கணிப் பீட்டின் மீதான நம்பிக்கை (நம்பகத்தன்மை) விருத்தி அடைகிறது.

பல ஆசிரியர்கள் கணிப்பீட்டிற்கான நியதிகளைச் சரியான முறையில் வகுத்துக் கொள்வதில் ஆர்வம் காட்டுவதில்லை. தம்மால் வகுத்துக் கொண்ட நியதிகளை முன்கூட்டியே மாணவருக்குத் தெரியப்படுத்துவதில்லை மாணவர்களுக்கு தமது கணிப்பீட்டிற்கான நியதிகளை விளங்கிக் கொள்ள கிடைக்கும் சந்தர்ப்பங்கள் குறைவாகவே உள்ளது.

சில மாணவர்கள் வினாக்களை முழுமையாகவாசிக்காமல் அல்லது விளங்கிக் கொள்ளாமல் விடையளிப்பது போல் சில ஆசிரியர்கள் கணிப்பீட்டுக்கான நியதிகளை வகுத்துக் கொள்ளாமல் அல்லது நியதிகளை வகுப்பதில் தெளிவற்ற நிலையுடன் கணிப்பிட முற்படுவது கணிப்பீட்டின் நம்பகத் தன்மையை நலிவடையச் செய்கிறது.

பாடசாலை மட்டக் கணிப்பீடு படிப்படியாக வலுப் பெற்று வரும் இந்நிலையில் க.பொ.த சாதாரண சித்திக்காக எழுத்துப் பரீட்சையின் பெறுபேற்றில் நலிவாகும் மாணவர்களுக்கு உயர்தரம் கற்பதற்கு கணிப்பீட்டுப் புள்ளிக்கும் கைகொடுக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. எனினும் க.பொ.த உயர்தரம். ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சைகள் என்பன போட்டிப்பரீட்சையாக இருக்கும் நிலை மாறும் வரை கணிப்பீட்டுப் பெறுபேறுகளை முற்றுமுழுதாக ஏற்பதில் தயக்கநிலை காணப்படுகிறது.

எனினும் பாடசாலை மட்டக் கணிப்பீட்டுச் செயற்பாடானது ஆசிரியர்களுக்கு பல்வேறு பத்திரங்களில் பதியும் எழுத்து வேலைகளை அதிகரித்துள்ளதால் கற்பித்தல் செயற்பாடுகளை பயனுறுதியுடன் ஆற்ற முடியவில்லை என குற்றச் சாட்டுகளும் எழுந்துள்ளன இதனை பல்வேறு மட்டங்களிலும் உணர்ந்த இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் கணிப்பீட்டிற்கான சந்தர்ப்பங்களை குறைத்துள்ளது.

மேலும் பாடசாலை மட்டக்கணிப்பீடு தொடர்பாக பெற்றோருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன இதன் அடிப்படையில் இம்மாதம் ஏழாம் திகதியை பாடசாலை மட்டக் கணிப்பீட்டுத்தினமாக S.B.A DAY கொண்டாட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ந.சிவநேசர்
ஆசிரிய ஆலோசகர்,
[சமூகக் கல்வி],
கிளிநொச்சி

## கட்டுரைப் போட்டியில் விசேட சித்தி பெற்ற நூறு மாணவர்களிற்குப் பரிசில் வழங்கல்

வீடமைப்புத் திட்டம் சிறப்புத் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் கௌரவிப்பு, ஆன்மீகக் கட்டுரைப் போட்டியில் விசேட சித்திபெற்ற 100 மாணவர்களுக்கு பரிசு வழங்கல் ஆகியன திருகோணமலை சாயி சமித்தியினால் மேற்கொள்ளப்பட்டவிருக்கின்றது. நாளை ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் இந் நிகழ்வுகள் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

புனர்வாழ்வு, புனரமைச்சின் ஆலோசகர் எஸ்.சிவதாஸா சிலிங்கோ நிறுவனங்களின் பிரதித் தலைவர் மாலாசபாரட்ணம், புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு அமைச்சின் ஆலோசகர் எஸ். சிவானந்தன் ஆகியோர் சிறப்புரையாற்றுவர்.வ.கி மாகாணசபையின் பிரதம செயலாளர் எஸ். ரங்கராஜா, மாகாணக்கல்வி அமைச்சின் செயலாளர் இ.தியாகலிங்கம், மாகாண பொதுச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் வி.பி பாலசிங்கம் மற்றும் சாயி நிறுவனங்களின் பிரபலஸ்தர்கள் பலரும் நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாகப் பங்குபெற்றுவர் என்று தெரிவிக்கப் பட்டது. நலிவுற்றோருக்கான வீடமைப்புத்திட்டத்தின் கீழ் தம்பலகமம் கிராமத்தில் நிறுவப்பட்ட முதலாவது வீடு ஒக்ரோபர் 17 ஆம் திகதி உரிமையாளரிடம் கையளிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.(25)

## த. பு.கழகத்தால் அமைக்கப்பட்ட இருமுன்பள்ளிகள் நாளை திறப்பு

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் டெனிஸ் அகதிகள் பேரவையின் (DRC) நிதியுதவியுடன் மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவின் நெடுங்கண்டல் கிராமத்தில் அமைக்கப்பெற்ற அந்தோனியார் முன்பள்ளியும் அடம்பன் கிராமத்தில் அமைக்கப்பெற்ற செனி.மேரிஸ் முன்பள்ளியும் நாளை காலை 11.00 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினர்களாக மன்னார் மறை மாவட்டஆயர் இராசப்பு யோசப் ஆண்டகை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர்சி.இனியவன் சிறப்பு விருந்தினர்களாக மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபர் சி.சுதாகர், டெனிஸ் அகதிகள் பேரவையின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி ரஞ்சன், மன்னார் மாவட்ட வாழ்வோதய இயக்குனர் வணபிதா யேசுராஜா, மடுவலயக்கல்விப்பணிப்பாளர் தெய்வேந்திரன், அடம்பன் பங்குத்தந்தை அருட்தந்தை இராசநாயகம் ஆகியோர் கலந்த கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

# தொடர்மழை, சூறாவளி, மண்சரிவு காலநிலை அவதான நிலையம் எச்சரிக்கை

சிறிலங்காவில் பல மாவட்டங்களில் மழையுடன் கூடிய கால நிலையினால் மண்சரிவு மற்றும் வெள்ளம், சூறாவளி அபாயம் இருப்பதாக கால நிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது. கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கேகாலை, இரத்தினபுரி, கண்டி, காலி, மாத்தறை, நுவரேலியா ஆகிய மாவட்டங்களில் தொடர் மழை நீடிக்கின்றது. வங்களா விரிகுடாவில் ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றத்தினால் மழையுடன் கூடிய கால நிலை நிலவும் என்றும், குறிப்பிட்டசில பிரதேசங்களில் டொனாடோ சூறாவழிக் காற்று வீசக்கூடுமென்றும் வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. இந்த நிலைமை தொடர்பாக குறிப்பிட்ட மாவட்டங்களின் அரச அதிபர்களுக்கும், பிரதேசங்களின் செயலாளர்களுக்கும், பொலிஸ் அதிகாரிகளுக்கும், நீர்ப்பாசன அதிகாரிகளுக்கும் அறிவுறுத்தல் விடுத்துள்ளதாகவும் வானிலை அவதான நிலைய உதவி இயக்குநர் எஸ். எம் காரியவசம் தெரிவித்துள்ளார்.

# ஒஸ்லோ பிரகடனத்திற்கமைய தீர்வு காணும் ரணிலின் நடவடிக்கைகள் நாட்டை துண்டாடும்

## - தேசிய பிக்குகள் முன்னணி எச்சரிக்கை

ஒஸ்லோ உடன்படிக்கைக்கமைய தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என எதிர்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க அளித்துள்ள உறுதிமொழியானது தமிழர் தாயகம், அவர்களின் தன்னாட்சி உரிமை என்பவற்றை ஏற்றுக் கொள்வதாகும் என்று குற்றம் சுமத்தும் தேசிய பிக்குகள் முன்னணி, ரணிலை சனாதிபதியாக்கினால் அது நாட்டை இரண்டாக்குவதாகவே இருக்கும் எனவும் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தேசிய பிக்குகள் முன்னணியின் செயலாளர் கலவெல்கல சந்திராலோகதேரர் விடுத்துள்ள அறிக்கையில்;

ஒஸ்லோ உடன்படிக்கைக்கமைய தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முனைவது என்பது நாட்டைப் பிரிக்கும். தமிழர் தாயகத்தினை தன்னாட்சி உரிமையை ஏற்றுக்கொள்ளும் நிலையாகும்.

ஐக்கிய தேசியக் கட்சி 2002ஆம் ஆண்டில் மேற்கொண்ட ஒஸ்லோ உடன்படிக்கை மூலமும் ரணில் அண்மையில் இந்தியாவில் வைத்து தெரிவித்த கருத்துக்களும் இதனை ஏற்றுக்கொண்டதையே உறுதிப்படுத்துகின்றன.

இதுவரை விடுதலைப்புலிகள் தமது தனிநாட்டுக் கோரிக்கையை கைவிடவில்லை. தமிழர் கூட்டமைப்பும் இதற்காகவே முன்நிற்கின்றது. நாம் ஈழத்தை அடையும் இலக்கு நாளுக்கு நாள் முழுமையடைந்து வருவதாக சு.ப தமிழ்ச்செல்வன் கூறுகின்றார். எனவே பிரிவினையை கைவிடாத புலிகளுடன் ஒஸ்லோ உடன்படிக்கைக்கமைய தீர்வினை மேற்கொள்வது நாட்டைப்பிரிக்கும் நடவடிக்கையே ஆகும். இதற்காகவே ரணில் முன்நிற்கின்றார். அவரைத் தோல்வியடையச் செய்ய நாம் ஒன்றிணைவோம் என அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# வாகனங்கள் பற்றாக்குறை

(கொழும்பு)

எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் கடமையாற்றுவதற்கு பொலிஸ் திணைக்களத்தில் வாகனங்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளபடியால் 1000 தனியார் வாகனங்களை வாடகைக்கு அமர்த்துவதற்கு பொலிஸ் மா அதிபர் தீர்மானம் எடுத்துள்ளார். தற்பொழுது பொலிஸ் திணைக்களத்தில் பழுதடைந்த வாகனங்கள் எல்லாவற்றையும் தேர்தலுக்கு முன்னதாக பழுதுபார்த்து சேவையில் ஈடுபடுத்துமாறு சகல பொலிஸ் திணைக்களங்களுக்கும் பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.


## சோலை விளையாட்டுக்கழக வருடாந்த விளையாட்டு விழா அழைப்பு 2005

**எதிர்வரும் 16.10.2005 அன்று காலையிலிருந்து மாலை வரை நடைபெறவுள்ள சோலை விளையாட்டுக் கழகத்தின் வீரர்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டு நிகழ்வில் அனைவரும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.**

இடம்:- பெருந்தோட்டப்பகுதி நடுவப்பணியக மைதானம், இல.11B இரண்டாம் பண்ணை கனகபுரம், கிளிநொச்சி.

ஆரம்ப நேரம்:-காலை 8.00மணி

மாலை நிகழ்வாக பி.ப 4.00 மணிக்குப் பரிசளிப்பு நிகழ்வு இடம்பெறும். (6854)

**03-10-2005 முதல் 01-11-2005 வரை**

SALE SALE SALE SALE

தீபாவளி மலிவு விற்பனை

நீங்கள் வாங்கும் சகல பொருடகளுக்கும்

விசேட கழிவு

உடனே விஜயஞ்செய்யுங்கள்:

**லைடன் புடைவை நிலையம்**

இல. 410, ஆஸ்பத்திரி வீதி

(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

☎ 222 2381 (சி-13019)

## வணிக,கைத்தொழில், வேளாண் சம்மேளனம்

## பணிநிலை வேண்டுகை

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் வணிக, கைத்தொழில், வேளாண்சம்மேளனங்களுக்கு கீழேகுறிப்பிட்ட பணிநிலைக்கு தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

**பணிநிலை:-** செயலலுவலர் (Executive Officer)

**தகைமை:-** க.பொ.த. (உ/த) வணிகப்பிரிவில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**சம்பளம்:-** தகைமை,அனுபவம் கருத்தில் எடுக்கப்பட்டு சம்பளம் நேரில்பேசித்தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு:-** அரச திணைக்களங்களில் பணியாற்றிய அனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

**மேற்குறித்த பணிநிலைக்கு தகுதியானவர்கள் தமது தகைமைச்சான்றிதழ்களுடன் நேர்காணலுக்கு சமுகம் தரவும்.**

**நேர்காணல் விரிப்பு:-**

**இடம்:-** வணிக ஒன்றியக் கேட்போர் கூடம், உதயநகர் மேற்கு,கிளிநொச்சி

**காலம்:-** 17.10.2005 (திங்கள்)

**நேரம்:-** காலை 10.00 மணி

(சி.13035)

## தமிழீழ வைப்பகம்

## பணிநிலை வேண்டுகை

தமிழீழ வைப்பகத்தினால் கீழ் காட்டப்படும் பணிநிலைக்குத் தகுதியான வர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

**01. பணிநிலை:- கணக்காளர் (ஒப்பந்த அடிப்படை)**

**பணி :-** கணக்கீட்டு முறைமைகளுக்கும்,கட்டுப்பாடுகளுக்கும் அமைவாகச் செயற்பாடுகளுக்கான கணக்கீட்டு ஆவணங்களைத் தன்னிச்சையாக உருவாக்கி முறையாகப் பேணுவதுடன், முகாமைக்குச் சரியான தகவல்களை வழங்கும் பதில் சொல்லும் பொறுப்புடைய (Accountability) பணியாகும்.

**தகைமைகள்:-** அ) ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் வணிகமாணிப் (B.Com) பட்டதாரியாக இருத்தல்/ ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில் நுட்பக்கல்லூரி ஒன்றின் உயர் தேசியக் கணக்கியல் டிப்ளோமா சான்றிதழைப் (HNDA) பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

ஆ) பிரிவு 'அ' இல் கூறப்பட்ட தகைமைகளுக்கு சமமான வேறு கணக்கீட்டுத் தகைமைகள் இருத்தல் வேண்டும்.

அல்லது

இ) ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமொன்றின் கணக்காளர் பணியில் பத்து (10) ஆண்டுகளுக்குக் குறையாத பட்டறிவுடையவராக இருத்தல் வேண்டும்.

**மாதாந்த ஊதியம்:-** ரூபா 15,000 மட்டும்

**ஒப்பந்த காலம்:-** 02 ஆண்டுகள்

**அகவை எல்லை:-** 30 ஆண்டுகளுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.

மேற்காட்டப்பட்ட பணிநிலைக்குத் தகுதியானவர்கள் தம்மால் தயாரிக்கப்பட்ட சுய விளக்கங்களுடனும், கீழ்காட்டப்படும் ஆவணங்களுடனும் இரத்தினம் மேல்மாடி, யாழ்சாலை, கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பக, நடுவப்பணியக, மனிதவளப் பகுதிக்கு, 25.10.2005 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு நேரில் வருகைதருமாறு வேண்டப்படுகின்றனர்.

01. கல்வித்தகைமையை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்.
02. ஏனைய தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்.
03. ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்.
04. நற்சாட்சிப் பத்திரங்கள்.

மனிதவள மேலாளர்,
மனிதவளப்பகுதி,
நடுவப்பணியகம்,
தமிழீழ வைப்பகம்.

(சி.13034)

# ஐக்கிய மு.கூட்டணி கூட்டத்தில் கலந்துகொள்ள இந்திய இடதுசாரிக்கட்சிகள் முடிவெடுத்தன

ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் கலந்து கொள்வது என்று இடது சாரிக் கட்சிகள் முடி[illegible]ய்துள்ளன.

இலாபத்தில் இ[illegible]ம் 'பெல்' நிறுவனம் (பாரதமிகுமின் நிறுவனம்) உள்ளிட்ட ஒன்பது பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை தனியாருக்கு விற்க மத்தியில் உள்ள ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு முடிவு செய்தது. மத்திய அரசுக்கு வெளியில் இருந்து ஆதரவு அளித்து வரும் இடதுசாரிக் கட்சிகள் இதற்கு கடும் எதிர்ப்புத்தெரிவித்ததோடு ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தை புறக் கணிப்பது என்று கடந்த ஜூன் மாதம் முடிவு செய்தன.

இந்த முடிவை கைவிடுமாறு இடதுசாரிக் கட்சிகளை பிரதமர் மன்மோகன்சிங்கும், ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் தலைவர் சோனியா காந்தியும் கேட்டுக்கொண்டனர்.

இந்த நிலையில் இடது சாரிக் கட்சிகளின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் டில்லியில் நடைபெற்றது இதில் ஒருங்கிணைப்புக்குக்குழுக் கூட்டத்தில் மீண்டும் கலந்து கொள்வது என்று முடிவு செய்யப்பட்டது. .

# பிரதமர் மன்மோகன்சிங் ரஷ்யாவுக்குச் செல்வார்

இந்தியப்பிரதமர் மன்மோகன்சிங் டிசம்பர் மாதம் ஐந்தாம்திகதி ரஷ்யா செல்கிறார். ரஷ்யாவில் அவர் இருநாட்கள் தங்கியிருப்பார்.

பிரதமரின் பயணத்துக்கு முன்னதாக இந்திய வெளியுறவுத்துறை மந்திரி நட்வர்சிங்வரும் 26ஆம் திகதி ரஷ்யா செல்கிறார். அவர் மன்மோகன்சிங்கின் விஜயத்திற்கான முன்னோடி பணிகளை கவனிப்பார்.

# மன்மோகன்சிங்கிற்கு அறுவைச்சிகிச்சை

பிரதமர் மன்மோகன்சிங்கிற்கு வலது கையில் சிறிய அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது. புதுடில்லியில் உள்ள அகில இந்திய மருத்துவ இயல்கழகத்தில் இந்த அறுவைசிகிச்சை நேற்று முன்தினம் காலை நடைபெற்றது.மன்மோகன்சிங்கின் வலது மணிக்கட்டு அருகே உள்ள நரம்பு ஒன்றில் ஏற்பட்ட அழுத்தத்தை நீக்குவதற்காக இந்த அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. அறுவைச் சிகிச்சைக்குப் பின் பிரதமர் வீடு திரும்பி தமது வழக்கமான பணிகளைக் கவனித்து வருகிறார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அவரது வலது கையில் சிலநாட்களுக்கு கட்டுப்போடப்பட்டிருக்கும் என்றும் பிரதமர் தமது பணிகளைத் தொடர்ந்து கவனிப்பார் என்றும் பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.


## ADVANCED FIELD OFFICER for FOOD SECURITY DEVELOPMENT PROGRAMS (JAFFNA)

Action contre la faim is an international NGO involved in humanitarian activities in Srilanka since 1997 Current activities are based in Ampara, Batticaloa, jaffna and Trincomalee districts. For a coming development programme of 2 years we require in jaffna services of a woman as advanced field officer (AFO)

This position is suitable for an economist or an agriculturalist who has strong experience of minimum 2 years in running livelihood programs and who is more than 27 years old.

The woman will be in charge of development programmes mainly in the islands with a targeted gender approach (intiatives with women s group widows) She will manage the collection and analysis of livelihood data the reporting and occasionally the representation at technical meetings in Jaffna She will join a team of 2 AFO s(junior and senior) and will work under the responsibility of the Food Security program Manager in Jaffna

Applicants must be charismattic good in team management fluent in English and able to do conversation in Tamil. Computer literacy especeiall7y MS Word and Excel is required.

Category: Senior position
Duratiopn: Iyear with insurance coverage
Apply within as soon as possible
ACF Food Security jop Vacancy
NO 40 Racca Lane
Chundilkuli
Jaffna
T.P 0212222465/0212222465 (சி-13024)



## குறைந்த கட்டணத்தில் உங்கள் பயணங்களை இலகுவாக்குங்கள்

MANOJ AIR TOURS (PVT) LTD

கொழும்பு சென்னை இரு வழி 18500/=
பாங்கொக் இருவழி 20500/=
சிங்கபூர் இருவழி 24000/=

பாங்கொக் சிங்கபூரில் சலுகைக் கட்டணத்தில் தங்குமிட வசதிக்கும் எம்மிடம் தொடர்பு கொள்ளவும்.

யாழ். - கொழும்பு இருவழி - 10990/=
யாழ். - கொழும்பு ஒருவழி - 6275/=

MANOJ AIR TOURS (PVT) LTD
32, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்
021 2223916
021 2222007

கொழும்பு
0112390128
0112361660
HOT.LINE 0777517019. (சி-13036)



## வடகிழக்குக் கட்டுமானத் தொழில்நுட்ப நிறுவனம்

## பணிநிலை வேண்டுகை

**01. கட்டட வேலை மேற்பார்வையாளர் (ஆண்)**

*தகைமை:- அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றில் BCT கற்கைநெறி பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.*

*அல்லது*

*அதற்குச் சமனான தகைமை பெற்றிருத்தலுடன் மூன்று வருடத்திற்குக் குறையாத அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.*

*அகவை:- 20 - 45 ஆண்டுகள்.*

**02.வேலை மேற்பார்வையாளர் (ஆண்)**

*தகைமை:- க.பொ.த. (சா/த) தேர்வில் கணிதம், விஞ்ஞானம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்வேண்டும்*

*அத்துடன்*

*மேற்பார்வைப் பணி தொடர்பாக மூன்று வருடத்திற்குக் குறையாத அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.*

*அகவை:- 20 - 45 ஆண்டுகள்.*

**03.களஞ்சியக்காப்பாளர் (ஆண்)**

*தகைமை:- க.பொ.த. (சா/த) தேர்வில் கணிதம், விஞ்ஞானம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்வேண்டும்*

*அகவை:- 20 - 45 ஆண்டுகள்.*

**04.காவல்கடமையாளர் (ஆண்)**

*தகைமை:- 8ஆம் தரம் சித்தியடைந்திருத்தல்வேண்டும்*

*அகவை:- 30 - 50 ஆண்டுகள்.*

➤ **சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.**

*நேர்முகத் தேர்வு:-*

18.10.2005 முதல் 19.10.2005 வரை காலை 09.00மணி முதல் மதியம் 01.00 மணி வரை எமது பணிமனையில் இடம்பெறும். விண்ணப்பதாரர் தமது சுய விபரத்துடனும், ஆவணங்களின் சான்றுகளுடனும் நேரில் சமூகம் தரவும்.


மனிதவள மேலாளர்,
வடகிழக்குக் கட்டுமானத் தொழில்நுட்ப நிறுவனம்,
(NECTEC)
கண்டி வீதி, ஆனந்தபுரம்,
கிளிநொச்சி. தொலை பேசி இல. 0212285917

(சி-13037)


## 05ம் ஆண்டு நினைவு நாள்

தாயின் மடியில் — மண்ணின் மடியில்

1979 — 2000
07 — 10
27 — 15



**உம் லெப். மாறன்**
(இரத்தினராசா செல்வகுமார்)
துணுக்காய்

தாய் நிலம் காப்பதற்காய்
தலைவன் அணி சேர்ந்தவனே!
பாய்கின்ற புலிச் சேனையிலே
பாய்ந்த புலி ஆனவனே!
விழும் தமிழ் என்றவனை
வீழ்த்தும் புலியாய் நின்றவனே!
வாழுகின்ற காலம் வரை
உன் நினைவுகள் கூடிவரும்
வானத்து விண்மீனாய்
எம் வாசல் வந்து சேர்ந்திருப்பாய்.

தகவல் :
இரா. சிவகுமார்,
23/02, தொட்டியடி,
விசுவமடு.

பிரிவால் துயருறும்,
குடும்பத்தினர்,
போராளிகள்,
நண்பர்கள்.

(6848)

## பாக்.இல் ஆசிய கிண்ண பெண்களுக்கான கிரிக்கெட் போட்டி!

பாகிஸ்தான் கிரிக்கெட்சபை முதன் முதலாக பெண்களுக்கான ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டித் தொடரை நடத்த தீர்மானித்துள்ளது.

வரும் டிசம்பரில் நடத்துவதற்கு திட்ட மிட்டுள்ள இத்தொடரில் இந்தியா, சிறிலங்கா, பாகிஸ்தான், பங்களாதேஷ் பெண்கள் அணிகள் பங்குபற்றுகின்றன. இந்தப் போட்டி ஆசிய நாடுகளில் பெண்களின் கிரிக்கெட் தரத்தை உயர்த்த உதவும் என பாகிஸ்தான் பெண்கள் கிரிக்கெட் அணி தேர்வாளரான ஷொம்சா ஹஸ்மி தெரிவித்துள்ளார்.

ஆசியாவில் இந்தியப் பெண்கள் அணி கடந்த ஏப்ரலில் உலகக்கிண்ண இறுதிப் போட்டிவரை சென்றுள்ளது. எனினும் சிறி லங்கா, பாகிஸ்தான் பங்களாதேஷ் நாடுகள் அதற்கு தகுதி பெறவில்லை என்பது குறிப் பிடத்தக்கது.

## சிறிலங்காவுடனான ஒருநாள் தொடர் ராவிட் தலைமையிலான இந்.அணி அறிவிப்பு!



சிறிலங்காவுக்கு எதிரான முதல் இரண்டு ஒருநாள் போட்டி தொடரிக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. கிரிக்கெட் அணித்தேர்வுக்குழுத்தலைவர் கிரன்மொரே மற்றும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டின் வாரியச் செயலர் எஸ்.கே.நாயர் சண்டிகரில் நேற்று அறிவித்தல் வெளியிட்டனர். இந்திய அணித் தலைவராக ராகுல் ராவிட், விரேந்திர சேவாக், சச்சின் டெண்டுல்கர், யுவராஜ்சிங், வேணுகோபால் ராவ், எம.எஸ்டோனி, சுரேஸ் ரெய்னா, ஹர்பஜன்சிங், முரளி கார்த்திக், இர்பான் பதான், அஜித் அகக்கர் ஜே.பி.யாதோப், ஆர்.வி.சிங், சிறிசாந் கௌதம் கம்பீர் ஆகியோர் இந்த அணியில் இடம பெற்றுள்ளனர்.காயம் காரணமாக முகமது கைப் மற்றும் அசிஸ் நெக்ரா, சகீர்கான் ஆகியோர் இந்த அணியில் இடம் பெறவில்லை.

இதற்கு முன்னதாக நேற்று முன்தினம் இப்போட்டித் தொடருக்கான அணித்தலைவராக ராகுல் ராவிட் நியமிக் கப்பட்டார்.

இதுவரை அணித்தலைவர் பதவியிலிருந்த கங்குலி அண்மையில் பயிற்றுநரான கிரேக் சப்பலுடன் கருத்து மோதலில் ஈடுபட்டதும் பின்னர் உள்ளூர் அணிகளின் சலஞ்சர் கிண்ணப் போட்டிகளில் காயம் என்று கூறி போட்டியில் பங்கேற்காமை என்ற பல்வேறு பிரச்சினை களுக்கு முகம் கொடுத்திருந்தார். எனினும் சிறிலங்காவுடனான தொடரில் பங்கேற்பதாகவும் தெரிவித்திருந்தார். இந்நிலையில் கிரிக்கெட் தேர்வாளர்கள் நேற்று முன்தினம் ராவிட்டின் தலைமைபற்றி அறி வித்துள்ளனர்.அதன்படி சிறிலங்கா, தொன்னாபிரிக்கா அணிகளுடான ஒருநாள் தொடருக்கும் ராவிட் தலைமை பொறுப்பு வகிப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## ஆசிய கிண்ண கிரிக்கெட்; இந்-பாக்.ஒரே பிரிவில்!

ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டியில் இந்தியாவும்,பாகிஸ்தானும் ஒரே பிரிவில் இடம்பெற்றுள்ளன. ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டிகள் பாகிஸ்தானில். அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் நடக்கவுள் ளன. இதில் இந்தியா, பாகிஸ்தான். சிறிலங்கா, பங்களாதேஷ், ஐக்கிய அரபுஇராச்சியம், ஓமான் ஆகிய நாடுகள் பாங்கேற்கின்றன. இந்தப் போட்டி களுக்கான கால அட்டவணையை ஆசிய கிரிக் கெட் சபை மலேசியாத் தலைநகர் கோலா லம்பூரில் கடந்த புதன் கிழமை வெளியிட்டது.

'ஏ' பிரிவில் இலங்கை,பங்களாதேஷ், ஐக் கிய அரபு இராச்சியம், ஆகிய அணிகளும் 'பி' பிரிவில் இந்தியா, பாகிஸ்தான்,ஓமான், ஆகிய அணிகளும் இடம்பெற்றுள்ளன.ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரண்டு இடங்களைப்பிடிக் கும் அணிகள் அடுத்த சுற்றுக்குத் தகுதி பெறு கின்றன. அடுத்த சுற்றில் நான்கு அணிகளும் ஒன்றுடன் ஒன்று மோதுகின்றன. இதில் முதல் இரண்டு இடங்களை பிடிக்கும் அணிகள் இறுதிப்போட்டிக்குக் தகுதி பெறுகின்றது.

போட்டிகள் பெப்ரவரி பாத்தாம் திகதி முதல் 28ஆம் திகதி வரை நடக்கின்றன. இந்தியாவும் பாகிஸ்தானும் கராச்சியில் பெப்ரவரி 18ஆம் திகதி மோதுகின்றன.








## உலக 11பேர்- அவுஸ். டெஸ்ட் போட்டி முதலாம் நாள் முடிவில் அவுஸ். அணி 331/6

அவுஸ்ரேலியா மற்றும் உலக பதினொரு பேர் அணிகள் பங்குபற்றும் ஆறுநாள் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் ஆரம்ப நாளான நேற்று ஆட்டம் போதிய வெளிச்சமின்மையால் நிறுத்தப்பட்டபோது அவுஸ்ரேலிய அணி ஆறுவிக்கெட் இழப்புக்கு 331 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.


நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்ரேலியா முதலில் துடுப்பெடுத்தாடியது அதன்படி ஆரம்ப வீரர் களாக லாங்கரும், கெய்டனும் களமிறங்கினர். எனினும் முதலாவது ஓவரிலேயே லாங்கர் ஓட்டமெதுவும் பெறாமல் ஆட்டமிழந்தார்.அவர் இங்கிலாந்து வீரர் ஸ்டீவ் ஹார்மிசன்பந்து வீச்சில் போல்ட் ஆனார். பின்னர் கெய்டனுடம் இணைந்து அணித்தலைவர் பொண்டிங் 46 ஓட்டங்களைப்பெற்றுத்தந்தபோது பிளிண்டொப்பின் பந்துவீச்சில் கலிசிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அதனைத்தொடர்ந்து கிளார் 39 ஓட்டங்கள் பெற்ற நிலையில் விட்டோரியின் பந்தவீச்சியில் சேவாக்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அதனையடுத்து கடிச் ஓட்டம் பெறாத நிலையில் ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்தார். அடுத்து ஆரம்ப வீரராக களமிறங்கிய கெய்டன் 111 ஓட்டம்பெற்ற நிலையில் முரளியின் பந்த வீச்சில் கலிசிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். ஆட்டநேர முடிவில் கில் கில்கிறிஸ்ட் 94 ஓட்டங்களுட னும் வோர்ன் ஒரு ஓட்டத்துடனும் களத்தில்நிற்கின்றனர்.











- தாய்லாந்து ஓபன்டெனிஸ் -

## காயம் காரணமாக சானியா விலகல்!



தாய்லாந்தின் தலைநகர் பாங் கொங்கில் நடைபெறும் தாய்லாந்து ஓபன் டென்னிஸ் தொடரில் கலந்து கொண்டு முதல் சுற்றில் சுலோவாக் கிய வீராங்கனையான கென்றிதாவை வெற்றிகண்ட இந்திய வீராங்கனை சானியாமிர்சா நேற்று முன்தினம் சீன வீராங்கனை மெங்யூவானுடனான இரண்டாவது சுற்று ஓட்டத் தின்போது முதுகில் ஏற்பட்ட காயம் காரணமாக இடைநடுவில் களத்தை விட்டு அகன்றார்.

இதன் காரணமாக சீன வீராங் கனை வெற்றிபெற்றதாக அறிவிக் கப்பட்டது.

எனினும் கடந்த புதனன்று இரட் டைப் போட்டியொன்றில் இஸ்ரேல் வீராங்கனை சகாபீர் என்பவருடன் இணைந்து ஆடி அமெரிக்காவின் கார்லி, அபிகார்லி இணையை வென் றுள்ளார்.

நேற்றுமுன்தினம் ஏற்பட்ட காயம்காரணமாக இரட்டையர் இரண் டாம் சுற்றிலும் அவர் பங்கேற்க முடி யாதுள்ளார்.




## உலகக் கிண்ணக் கால்பந்து பிரான்ஸ், சுவீடன், சேர்பியா தகுதி

அடுத்த வருடம் ஜேர்மனியில் நடைபெறவுள்ள உலகக்கிண்ண கால்பந்தாட்டத்தொடரில் பங்குகொள்ள நடைபெற்ற தகுதிகாண் போட்டியில் பிரான்ஸ், சுவீடன், சேர்பியா அணிகள் தகுதி பெற்றுள்ளன.

எனினும்கடந்தாண்டு நடைபெற்ற ஐரோப்பிய கிண்ணப் போட்டியில் சம்பியன் பட்டம் வென்ற கிறிஸ் அணியால் தகுதிபெற முடியாதுபோய்விட்டது. நேற்று முன்தினம் ஏதென்சில் நடைபெற்ற ஜோர்ஜியாவுடனான போட்டியில் அது ஒன்றுக்குப் பூச்சியம் என்ற கோல் கணக்கில் தோல்வியுற்றது. மேலும் பிரேசிலில் நடைபெற்ற இன்னும் ஒரு தகுதிகாண் போட்டியில் பிரேசில் வெனிசுலாவை மூன்றுக்குப் பூச்சியம் என்ற ரீதியில் வென்றுள்ளது.



## பெல்கிரேட்டில் கால்பந்து ரசிகர் இடையே மோதல்


நேற்று முன்தினம் பெல்கிரேட்டில் நடைபெற்ற கால்பந்தாட்ட தகுதிகாண் போட்டியொன்றின்போது வன்முறை ஏற்பட்டதால் 17 பேர் காயமடைந்ததாகத் தெரிய வருகிறது.

இப்போட்டியில் செர்பியா அணியும் மாண்டினெக்ரோ அணியும் மோதின. சுமார் 55 ஆயிரம் ரசிகர்கள் திரண்டிருந்தவேளை திடீரென வன்முறை தலைதூக்கிய தாகவும் இருஅணிகளின் ரசிகர்களும் மோதிக்கொண்ட தாகவும் காயமடைந்தவர்கள் பெல்கிரேட் வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் இவர்களில் ஆறு பேரின் நிலை கவலையளிப்பதாகவும் தெரிவிக்கப்படு கிறது.

## வலைப்பந்தாட்ட பரீட்சை நாளை

இலங்கை வலைப்பந்தாட்டச் சங்கத்தினால் நடாத்தப்படவிருக்கும் வலைபந்தாட்ட மத்தியஸ்தர் களுக்கான பரீட்சை நாளை ஞாயிற்றுக்கிழமை நடை பெறவுள்ளது.

யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய மாவட்டங்களில் நடைபெறவுள்ள மேற்படி பரீட்சையில் அனுமதி அட்டை வராதவர்கள் எந்த மாவட்டத்திற்கு விண்ணப் பித்தர்களோ அந்த மாவட்டத்தில் பரீட்சையில் பங்கு கொள்ளலாம் என கிளிநொச்சி மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார்.



### சிந்தனைக்கு

மிகவும் கொடுங்கோன்மையான இராணுவ சர்வாதிகார ஆட்சி எம்மீது திணிக்கப்பட்டிருக்கின்றது; தமிழ் இனத்தின் தேசிய ஆன்மாவை ஆயுத பலாத்காரத்தின்மூலம் அடிமை கொள்வதே எதிரியின் திட்டம்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 15.10.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## மேலாதிக்கம்!

சமாதானப்பேச்சு வார்த்தைகளுக்கு ஏற்பாட்டாளர்களாகச் செயற்படும் நோர்வே அரசு தரப்பு உட்படபல மேற்கு நாடுகள் யுத்தநிறுத்தம் ஒழுங்காகக் கடைப்பிடிக்கப்படவேண்டும். சமாதானப் பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கைகளை தொடர்ச்சியாக விடுத்த வண்ணம் உள்ளன. அதாவது வன்முறைகள் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு இனப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்படுதல் வேண்டும் என்பதே அவர்கள் கூறிக்கொள்வதாகும்.

ஆனால் தற்பொழுது ஆட்சியில் இருக்கும் அரசாங்கம் ஆட்சிப்பொறுப்பேற்று சுமார் இரண்டு ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் எவையும் மேற்கொண்டதாக இல்லை. மாறாகச் சமாதான முயற்சிகள் யாவும் முடக்கப்பட்டுள்ள நிலையில் யுத்தநிறுத்தம் பெரும் கேள்விக்குள்ளாகும் நிலையே உருவாகியுள்ளது.

ஆனால் இவ்விடயத்தில் விடுதலைப்புலிகள் நீண்டதும், உறுதியானதுமான ஒத்துழைப்பையும் நிலைப்பாட்டையும் கொண்டவர்களாகவே இருந்து வருகின்றனர். அதாவது விடுதலைப்புலிகள் சமாதான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு என்றுமே தயாராக இருந்தனர். இதனை தம்மைச் சந்தித்த சமாதான ஏற்பாட்டாளர்கள் மற்றும் இராஜதந்திரிகள் மட்டத்திலும் விடுதலைப் புலிகள் உறுதிபடக்கூறியும் வந்துள்ளனர்.

விடுதலைப்புலிகள் இயக்கம் யுத்தநிறுத்தத்தை கைவிட்டு யுத்தத்தை ஆரம்பிக்கவேண்டியதான அழுத்தங்கள் கொடுக்கப்பட்ட போதும் விடுதலைப்புலிகள் தமது நிலைப்பாட்டில் இருந்து மாறவில்லை. தற்பொழுது கூட யுத்தநிறுத்த அமுலாக்கம் குறித்து எவ்வேளையிலும் பேச்சுவார்த்தை நடாத்த புலிகள் இயக்கம் தயாராகவே உள்ளது. நேற்றுமுன்தினம் தம்மைச் சந்தித்த நோர்வேயின் சிறப்பு தூதுவரான முன்னாள் யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுத்தலைவரான டொன்புறு ஹொவ்டேயிடமும் இதனை விடுதலைப்புலிகள் வலியுறுத்தியுள்ளனர்.

இதை ஒத்ததாகவே சமாதான பேச்சுவார்த்தை தொடர்பாகவும் விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு உள்ளது. அதாவது யுத்தநிறுத்த உடன்பாடு செய்து கொள்ளப்பட்டதன் பின்னர் இருதரப்பினரும் பேச்சுவார்த்தைகளை நடாத்தியது போன்று ஒரு நடுநிலைமையான நாட்டில் சுதந்திரமானதொரு சூழலில் பேச்சுவார்த்தைகளை தொடங்க விடுதலைப்புலிகள் எப்பொழுதும் தயாராகவுள்ளனர் இதனை அவர்கள் அடிக்கடி வலியுறுத்தியும் வருகின்றனர்.

ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை முடக்கத்திற்கு உள்ளானதையடுத்து குறிப்பிடத்தக்க கால இடைவெளியின் பின் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை தொடர்பான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க ரணில் அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் தயாரான போதே சனாதிபதி சந்திரிகாவால் முட்டுக்கட்டை தோற்றுவிக்கப்பட்டது. ரணில் விக்கிரமசிங்க அரசாங்கமும் கவிழ்க்கப்பட்டது.

இதன் பின்னரான சுமார் இரண்டு வருடகாலப்பகுதியிலும் விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தைக்கு தயாராக இருந்தபோதும் அரசாங்கமோ பேச்சுவார்த்தைகளுக்கு தயாராக இருக்கவில்லை. பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு புதிய நிபந்தனைகளையும் புதிய திட்டங்களையும் முன்வைத்தது.அத்தோடு கடந்த அரசாங்கம் பின்பற்றிய வழிமுறையையும் பின்பற்ற மறுத்தது. யுத்தநிறுத்தம், பேச்சுவார்த்தை ஆகியவற்றில் திருத்தங்களும் மாற்றங்களும் செய்யப்படவேண்டுமென குழப்பங்களைத் தோற்றுவித்தது.

அதாவது யுத்தநிறுத்த உடன்பாட்டின் அமுலாக்கம் பற்றிப் பேசுவது என்பதைவிடுத்து யுத்தநிறுத்தம் புலிகளுக்குச் சார்பானதாகவிருப்பதாக கூறி யுத்தநிறுத்த உடன்பாட்டில் குழப்பத்தை தோற்றுவிக்க முனைந்தது.இதேபோன்று சமாதானப் பேச்சுவார்த்தைகளை கொழும்பில் நடாத்தவேண்டும் எனவும், வெளிநாடுகளில் பேச்சுவார்த்தை நடாத்த அரசு தயாராகயில்லையெனவும் கூறியது.

இவ்வாறாக யுத்தநிறுத்தத்தை உறுதியாக அமுல்செய்யாத அரசாங்கம் அதில் மாற்றம் வேண்டும் எனக் கோரியது. சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடுநிலைமையான இடத்தில் நடாத்தாது தனது செல்வாக்கிற்குட்பட்ட தனது அதிகாரத்திற்குட்பட்ட பகுதிக்குள் நடாத்தவேண்டும் என பேச்சுவார்த்தைகளுக்கு முட்டுக்கட்டைகளை உருவாக்கியது. அதாவது விடுதலைப்புலிகளுடன் சமபல நிலை என்ற ரீதியில் செய்து கொள்ளப்பட்ட யுத்தநிறுத்த உடன்பாட்டை அமுல் செய்யவோ அன்றி விடுதலைப்புலிகளை சமநிலையில் வைத்து பேச்சுக்களை நடத்தவோ தற்போதைய ஆட்சியாளர்கள் தயாராக இல்லாததே தற்போதைய நிலைக்குக் காரணமாகும்.

இந்தவகையில் இலங்கையில் இன்று அமைதி நீடிப்பதற்கும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிப்பதற்கும் சிறிலங்கா அரசாங்கமே முட்டுக்கட்டையாகவுள்ளது. ஆகையினால் விடுதலைப் புலிகள் மீது நிர்ப்பந்தம் கொடுப்பதோ. அழுத்தங்களைப் பிரயோகிப்பதோ நியாய பூர்வமற்றது. இதேசமயம் விடுதலைப்புலிகளும் தற்போதைய நிலைக்குக் கீழ்ப்பட்டு செல்வதென்பது சாத்தியப்பாடானதல்ல, எதிர்பார்க்கக்கூடியதும் அல்ல.

# ஆழிப்பேரலை பாதித்த பிரதேசங்களில் விதிக்கப்பட்ட தடை தளர்வு

(கொழும்பு)

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட நாட்டின் கரையோரப் பகுதிகளில் விதிக்கப்பட்டிருந்த 100 மீற்றர் மற்றும் 200 மீற்றர் கட்டட நிர்மாணங்களுக்கான தடை தளர்த்தப்பட்டுள்ளதாக சிறிலங்கா அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தத் தளர்வானது தென் மாகாணக் கரையோரப்பகுதிகளில் 55 முதல் 25 மீற்றர்வரை அமுல் செய்யப்பட்டுள்ளதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

வடக்குகிழக்கு பகுதிகளில் இந்தத் தளர்வானது 100 மீற்றர் முதல் 50 மீற்றர் வரை குறைக்கப் பட்டிருந்தது.

மீனவர்களின் வாழ்க்கை நிலையை பிரச்சினைகளின்றி முன்னெடுத்துச்செல்ல வசதியாக இந்தமுறை அமுல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, களுத்துறை, காலி மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் 100 மீற்றர் 35 மீற்றராக குறைக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் இருந்து 200 மீற்றர் தடையானது 50 மீற்றராக குறைக்கப்பட்டுள்ளது. பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கும், உரிய அதிகாரிகளுக்குமிடையில் இடம் பெற்ற கலந்துரையாடலின் பின்னர் இந்த தீர்மானத்தை அமுல் செய்யுமாறு பிரதேச செயலர்களுக்கு அறிவுறுத்தல் அனுப்பப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் புதிய கரையோர தடைப்பிரதேச உத்தரவின்படி இனி வரும் காலங்களில் பொத்துவில் மற்றும் அருகம்பே ஆகிய இடங்களில் 60 மீற்றர் கரையோர பிரதேசமே தடைசெய்யப்பட்ட பிரதேசமாக இருக்கும்.

அம்பாறை, கல்முனையிலும் 65 மீற்றரும் மட்டக்களப்பு மற்றும் காத்தான்குடி ஆகிய இடங்களில் 80 மீற்றரும் தடைசெய்யப்பட்டதாக இருக்கும்.

மூதூர், திருகோணமலை, கிண்ணியா,குச்சவெளி, ஆகிய .இடங்களில் 50 மீற்றர் பகுதி தடை செய்யப்பட்டதாக இருக்கும்.

பருத்தித்துறையிலும் மருதங்கேணியிலும் கரையோர நிர்மாணத் தடை 100 மீற்றராக இருக்கும்,

வெலிகமையில் 35 மீற்றராகவும்,அம்பாந்தோட்டையில் 40 மீற்றராகவும், காலியில் 25 மீற்றராகவும், மக்கொணையில் 40 மீற்றராகவும், பேருவளை மருதானையில் 60 மீற்றராகவும் புதிய தடைப்பிரதேசம் அமைந்திருக்கும். திக்வெல்லயில் 32 மீற்றராக இந்த தடை அமுல் செய்யப்படும்.

# வட-கிழக்கு பிரச்சினைக்கு சரியான தீர்வை முன்வைக்கும் தலைவரை ஆதரியுங்கள்

### - ஜே.வி.பி யின் தலைவர் சோமவன்ச கூறுகிறார்

(கொழும்பு)

பொருட்களின் விலைகளை குறைப்பதற்கு முன்னர் வடகிழக்கு பிரச்சினைக்கு சரியான தீர்வை முன் வைக்கும் தலைவரை தெரிவு செய்வதற்கு வாக்களிக்க வேண்டும் என ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார். இந்த நிலையில் வட கிழக்கில் சட்ட விரோத ஆட்சி ஒன்றுள்ளமை பிரச்சினைக்குரிய விடயமாகும். பொருளாதாரப் பிரச்சினையை விட இது பாரதூரமானது. இதற்கு தீர்வு காண வேண்டும். அத்துடன் பொருட்களின் விலைகளை எவரும் குறைக்க முடியும் எனத் தெரிவிக்கும் சோமவன்ச அமரசிங்க தனது கட்சியிடம் அதற்கென செயற்திட்டம் ஒன்று உள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை இராணுவத்தை கலைக்க வேண்டும் போன்ற கதைகளை கூறும் சோமவன்ச அமரசிங்க ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை பார்த்து பீதியடைந்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதி பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார். (32)

# பதாகைகள், சுவரொட்டிகளை அகற்ற அரசுக்கு ரூபா 150 இலட்சம் செலவாகும்!

### -18 ஆயிரம் பேர் நியமிப்பு

சனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களினால் நாடு முழுவதும் காட்சிக்கு வைக்கப் பட்டுள்ள பதாகைகள் மற்றும் சுவரொட்டிகளை அகற்ற அரசாங்கத்திற்கு 150 இலட்சம் செலவாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ள தினத்தில் இருந்து பிரச்சார நடவடிக்கைகள் முடிவடையும் தினமான எதிர்வரும் 14 ஆம் திகதி வரை இவை அகற்றப்படும். எனினும் நாளுக்கு நாள் தேர்தல் பிரச்சார சுவரொட்டிகளும் பதாகைகளும் காட்சிக்கு வைப்பது அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை நாடு முழுவதும் சுமார் 18 ஆயிரம் பேர் இவற்றை அகற்றும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

# பல கொலைகளுடன் தொடர்புபட்ட பாதாள உலக முக்கியஸ்தர் கைது!

பல கொலைகளுடன் சம்பந்தப்பட்ட பாதாள உலக முக்கிய சந்தேகநபர் ஒருவர், இரத்தினபுரியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். நெல்சன் என்ற 21 வயதான சந்தேக நபரே நேற்று கைது செய்யப்பட்டவராவார்.

மூன்று பொலிஸ் அதிகாரிகளின் கொலை தொடர்பில் இவர் தேடப்பட்டு வந்தவராவார்.

அத்துடன் தென்மாகாண அமைச்சர் ஒருவரது மகனின் கொலை தொடர்பிலும் தென்மாகாணத்தில் இடம்பெற்ற 20 கொலைகளுடனும் இவருக்கு தொடர்புகள் இருப்பதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இவரைக் கைது செய்யும்போது சுழல் துப்பாக்கி ஒன்றும் கைப்பற்றப் பட்டுள்ளது. (32)

## வெளிநாட்டுப் பயணங்களுக்குத் தடை

எதிர்வரும் சனாதிபதித் தேர்தல் முடியும் வரை அரச ஊழியர்கள் தமது வெளிநாட்டுப் பயணங்களை இரத்துச் செய்யுமாறு சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உத்தரவிட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

சந்திரிகாவின் இந்த உத்தரவு தொடர்பாக அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களிற்கு எழுத்து மூலமான அறிக்கை சனாதிபதி செயலகத்தால் வியாழக்கிழமை அனுப்பப்பட்டுள்ளது.

# சனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றால் ஆண்டுக்கு 13 மாத ஊதியம் வழங்க ஏற்பாடு

### ஐ.தே.க நேற்று அறிவிப்பு

சிறிலங்கா சனாதிபதித் தேர்தலில் தாம் வெற்றி பெற்றதும்அரச ஊழியர்களுக்கு 13 மாத ஊதியம் வழங்கப்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகவியலாளர் மாநாட்டில் அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேகுணவர்த்தன கூறியதாவது;

சிங்கப்பூர், ஜப்பான் ஆகிய நாடுகளில் வருடத்திற்கு 13 மாத சம்பளம் வழங்கப்படுகிறது. சிறிலங்காவிலும் அதேபோன்றதொரு நிலை உருவாக்கப்படும்.

வழமையாக வழங்கப்படும் 12 மாத சம்பளத்திற்கு மேலதிகமாக வழங்கப்படும் இந்தச் சம்பளத்தினை டிசம்பர் மாதம் முதலாம் திகதியோ, சனவரி மாதம் முதலாம் திகதியோ பெற்றுக் கொள்ளலாம். அல்லது ஏப்ரல் மாதம் முதலாம் திகதியோ 10 ஆம் திகதியோ பெற்றுக் கொள்ளமுடியும்.

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு இந்த 13 ஆவது சம்பளம் வழங்கப்படும்.

அத்துடன் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் இந்தக் கொடுப்பனவு வழங்கப்படும். ஓய்வூதியம் பெறுபவர்களிடையே காணப்படும் கொடுப்பனவு முரண்பாடுகளை சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

அரச ஊழியர்களுக்கென 25,000 வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படும். அவற்றின் காணிப்பெறுமதியின்றி வீட்டின் பெறுமதிக்கே வீடுகள் வழங்கப்படும். அதற்காக நிவாரணங்களும் வழங்கப்படும்.

மேலும் தனியார் துறையினருக்கான சம்பள அதிகரிப்பிற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் வஜிர அபேகுணவர்த்தன.

# அனைத்து சமூகங்களும் ஏற்கும் வகையிலான சமாதானத்தை உருவாக்குவதே என் எதிர்பார்ப்பு

## வவுனியா பிரச்சாரக் கூட்டத்தில் ரணில்

(வவுனியா)

இந்த நாட்டில் அனைத்து சமூகங்களும் ஏற்றுக் கொள்ளும் வகையிலான சமாதானம் ஒன்றினை ஏற்படுத்துவதே எனது எதிர்பார்ப்பு. அதே நேரம் எல்லோரும் சமாதானமாகவும் சமத்துவமாகவும் வாழ்வதற்கே விரும்புகின்றனர் அவர்களின் அபிலாசையினை நிறைவேற்றுவதே எனது குறிக்கோள் என்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் உட்பட அனைத்துக் கட்சிகளுடனும் கலந்துரையாடி ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு காணப்படும் என்று நேற்று வவுனியாவில் இடம் பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பிரச்சாரத்தின் போது ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். நேற்று மாலை 3.35 மணியளவில் வவுனியா நகர சபை மைதானத்திற்கு வருகை தந்த அவர் முன்னதாக விசேட உலங்குவானூர்தியில் வன்னி இராணுவ தலைமையகத்திற்கு வருகை தந்து பின்னர் வவுனியா நகரசபை மைதானத்திற்கு வருகைதந்திருந்தார். ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பிரச்சாரத்தில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப்ஹக்கீம் முன்னாள் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் நூர்தீன் மசூர், முன்னாள் சபாநாயகர் அஸ்வர் வைத்திய கலாநிதி ஜயலத் ஜயவர்த்தன, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வேலாயுதம் உட்பட பல முக்கிய அரசியல் வாதி களும் கலந்து கொண்டனர். தொடர்ந்து ரணில் விக்கிரம சிங்க உரையாற்றும் போதுசனாதிபதி, தமிழீழ விடுதலைப் புலிகள், ஐக்கிய நாடுகள், உதவி வழங்கும் நாடுகள் உட்பட அனைத்து தரப்பினரையும் உள்ளடக்கி அவர்களின் விருப்பத்திற்கு ஏற்றவாறும் மூவின சமூகமும் ஏற்றுக்கொள்ளும் வகையில் சமஷ்டி முறையிலான தீர்வு ஒன்றினையே தான் ஏற்படுத்த இருப்பதாகவும் சமஷ்டி என்றால் வித்தியாசமான ஒன்று இல்லை என்றும் ஏற்கனவே இலங்கையில் ராஜதானிகளாக இது இருந்தது என்றும் தெரிவித்தார். இன்றைய பிரதமர் கூறுவது போன்று இலங்கையை பிரித்து கொடுக்க போவது இல்லை. பேச்சுவார்த்தை ஒன்று ஆரம்பிக்கப்படும் பட்சத்தில் அவர்களும் பேச்சுவார்த்தை மேசைக்கு அழைக்கப்படுவதுடன் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் ஜே.வி.பியினரை பேசி ஒரு தீர்வினை முன்வைக்குமாறும் தான் ஜே.வி.பியினரை கோரவிருப்பதாகவும் தெரிவித்தார். இதுவரை ஐக்கிய முன்னணியின் சனாதிபதி வேட்பாளர் இனப்பிரச்சினை தீர்வுக்கு தெளிவான முடிவு ஒன்றினையும் முன்வைக்கவில்லை என்று ரணில் குற்றம் சுமத்தியுள்ளார் சனாதிபதி யாகியதும் சமாதானத்தின் இரண்டாம் கட்டம் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் தொவித்தார்.

• (21)

### சுதந்திரக்...

இரகசியப் பேச்சு வார்த்தைகள் இடம்பெற்றுள்ளதாக அவர்களுடன் நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பண்டாரநாயக்க பரம்பரை வழியாக வந்த கட்சிக் கொள்கைகளை தொடர்ந்து முன்னெடுப்பதற்காகவும், சுதந்திரக் கட்சியை பாதுகாப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகள் குறித்தும் மூவரும் நீண்ட நேரம் கலந்தாலோசித்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் சனதிபதித் தேர்தலில் பரப்புரைக் கூட்டங்களில். தான் நாட்டில் இருந்து கொண்டு கலந்து கொள்ளாமல் தவிர்த்தால் அது தமது தந்தையின் நற்பெயருக்கு அபகீர்த்தியை ஏற்படுத்திவிடும் என்பதால், நாட்டில் இருப்பதை தவிர்த்தக் கொள்வதுஎன்றமுடிவும் சனாதிபதியால் எடுக்கப் பட்டதாகத் தெரிய வருகின்றது.

### விடுதலைப்புலிகளை...

வகிக்கும் விடுதலைப்புலிகள் சமாதானப்பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு தமிழ் மக்கள் தம்முடைய அரசியல் அபிலாசைகளை அடையவும் சர்வதேச அனுசரணையுடன் நடைபெறும் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் சிறிலங்கா அரசாங்கம் ஈடுபட்டு அரசியல் தீர்வை எட்டவழிப்படுத்தவேண்டும் எனவும் கேட்டுக்கொள்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(லோ,தீ)

## சிப்பாய் மாயம்!

மட்டக்களப்பு மாவட்டம் கும்புறு மூலையில் உள்ள சிறிலங்கா படையினரின் முகாமிலிருந்து லான்ஸ் கோப்ரல் தர படையினன் ஒருவர் ஆயுதங்களுடன் கடந்த திங்கட் கிழமை முதல் காணாமல் போயுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மில்டன் என்ற படைச்சிப்பாயே காணாமல் போயுள்ளதாகவும், அவரிடம் ரி-56 ரக துப்பாக்கி ஒன்றும், சில கைக் குண்டுகளும் இருந்ததாக இராணுவத் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதேவேளை இப்படையினன் காணாமல் போனது தொடர்பில் இரு பொதுமக்களை சிறிலங்கா பொலிசார் கைது செய்துள்ளனர்.

### புலமைப் பரிசில்...

ஆகிய மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

கிளிநொச்சி மகாவித்தியாலயத்திலிருந்து இ.ஜனத் 149. ந. சிந்துஜா 145, பா. நிதர்சனா 144,சி. வுதுசனன் 139, ம. றெறன்சியாஜானு 132, க.டிசாந்தன் 131,ம. நியோகிதன் 131, ஆகிய மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

கிளிநொச்சி மத்திய கல்லூரியிலிருந்து யோ.விதுஷன் 154, மு.கலைவிழி 136 ஆகிய மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

கிளிநொச்சி கனகபுரம் மகாவித்தியாலயத்திலிருந்து யோ.அமிர்தா 130 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.

இதே போன்று முல்லைத்தீவு மாவட்ட துணுக்காய் வலய பாடசாலையிலிருந்து சித்திபெற்ற மாணவர்களின் பெயர், புள்ளிகள் என்பன கீழ் வருமாறு.

மு/யோகபுரம் மாகாவித்தியாலயத்திலிருந்து சி. பிரியங்கன் 150, த. தர்சாயினி 143, இரகுராஜ் 132 ஆகிய மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

மு/மல்லாவி மத்திய கல்லூரியிலிருந்து பு.தர்சன் 129, சி.பிரசாந்தன் 132 ஆகிய இருவரும் சித்தியடைந்துள்ளனர்.

மு/அனிஞ்சியன் குளம் அ.த.க. பாடசாலையிலிருந்து ம. சுமித்திரா 133, சூ.கர்ணன் 136 ஆகிய இரு மாணவர்களும் சித்தியடைந்துள்ளனர்.

மு/பாலிநகர் மகாவித்தியாலயத்திலிருந்து ஜெ.ஜெனனி 138, க.கபிலேஸ் 143 ஆகிய இரு மாணவர்களும் சித்தியடைந்துள்ளனர்.

மு/வவுனிக்குளம் படிவம் 04 பாடசாலையில் இருந்து வி.நிவேதிகா 134, நா.விபூசன் 131 ஆகிய இரு மாணவர்களும், மு/ விநாயகபுரம் அ.த.க.பாடசாலையில் ச. ஜோஜிதா 131 புள்ளியும் பெற்று துணுக்காய் வலயப்பாடசாலை மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

மேற்படி சித்தியடைந்த மாணவர்களைப் பாடசாலை சமூகமும், பெற்றோர்களும் பாராட்டி வாழ்த்தியுள்ளனர். (கு.தீ)

### சர்வதேச...

அதற்கு நாம் நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றோம்.

ஏனெனில் போர்க்காலத்தில் மட்டுமல்ல சுனாமிப் பேரலையனர்த்தம் ஏற்பட்டபின்னரும் இந்த மண்ணில் பல மனிதாபிமான பணிகளை முன்னெடுப்பதற்கு எமக்கு பக்கபலமாக நின்று உழைத்துவரும் சர்வதேச தொண்டர் தாபனங்களுக்கு மிகுந்த கடமைப் பட்டிருக்கிறோம்.

யுத்தநிறுத்த சூழலில் இடம்பெற்ற ஆறுகட்ட சுற்றுப் பேச்சுவார்த்தைகளிலும் குறிப்பாக போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான ஒரு இயல்பு நிலையை கொண்டு வருவதற்கான ஒரு வேலைத் திட்டத்தை அமைத்தோம். இராணுவ நெருக்குவாரங்களிலிருந்து எமது மக்கள் மீண்டு, இடம் பெயர்ந்த மக்களை தமது சொந்த இடங்களில் குடியமர்த்தி மக்களுக்கான புனர்வாழ்வு பணியைச் செய்வதற்காக நோர்வேயினுடைய அனுசரணையுடனும், சர்வதேச சமூகத்தின் ஆதரவுடனும் உபகுழுவை அமைக்க முற்பட்டோம். அது சீர்குலைந்த நிலையில் பின்பு சுனாமி பேரலையனர்த்தம் நிகழ்ந்த பின்னர் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மறுவாழ்வு பணிகளை செய்வதற்கு சிறிலங்கா அரசாங்கத்துடனும் ஒரு இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொண்டோம். அது முழுமையாகவே சர்வதேச சமூகத்தின் ஈடுபாட்டோடும், ஆதரவுடனும்தான் ஒழுங்கமைக்கப்பட்டது. பொதுக்கட்டமைப்பு ஒப்பம் இடப்பட்ட நிலையில் சிறிலங்கா அரசாங்கத்தால் முடக்கப்பட்டு செயலிழந்துள்ளது.

இன்றைக்கு அரசியல் உரிமைகள் வேண்டி நீண்டகாலமாக போராடிய மக்கள் தற்போது மனிதாபிமான நெருக்கடியை சந்தித்து. மனிதாபிமான. நெருக்கடி யிலிருந்து மீள்வதற்கான பல முயற்சி களை எடுத்த மக்கள் அனைத்தும் நிராகரிக்கப்பட்ட நிலையில் மிகவும் விரக்தியுற்ற நிலையில் உள்ளார்கள். இருந்தாலும் சிறிலங்கா படைகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள நெருக்கடி நிலைமைகளை தாங்கள் அறிவீர்கள். ஆனால் எமது கட்டுப்பாட்டுப் பகுதியில் எழுபது வீதமான நிலப்பரப்பை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து ஒரு நடைமுறையரசை கட்டியெழுப்பி பல கட்டமைப்புக்களை கட்டியெழுப்பி தற்போதுதான் மக்களின் பேராதரவுடன் பலப்படுத்தி வருகின்றோம். ஆகவே தாங்கள் இரு பிரதேசங்களில் பணிகளை ஆற்றிக் கொண்டிருக்கிறீர்கள் எவ்வளவோ நெருக்கடிகளுக்கு மத்தியில் தங்கள் பணி இடம்பெறுகிறது. தங்களுக்கு எமது எல்லாவகையிலான ஆதரவுகளை தரத்தயாராகவுள்ளோம் எனத் தெரிவித்தா.

முற்பகல் 11.00மணியளவில் இடம்பெற்ற இச் சந்திப்பில் போறுட், ஹெயார், சோஆ, சிறுவர் பாதுகாப்பு நிதியம், டெனிஸ் அகதிகள் பேரவை (D.R.C), ஒக்ஸ்பாம், வூஸ். ஆகிய சர்வதேச தொண்டர் தாபனங்களின் பிரதிநிதிகள் இச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

## விடுதலைப்புலிகள் ஏடு இன்று வெளிவருகின்றது

தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடான "விடுதலைப்புலிகள்" பத்திரிகையின் புரட்டாதி -" ஐப்பசி மாதத்திற்குரிய 126 ஆவது குரல், "அமைதி வழியிலான அரசியலில் விரக்தியடையும் தமிழ்மக்கள்" என்ற முகப்புச் செய்தியுடன் இன்று வெளிவருகின்றது.

"ஐரோப்பிய யூனியனின் அநீதியான நிலைப்பாடு" எனச்சொல்லும் ஆசிரிய தலையங்கத்துடன் வரும் இவ்வேடு, க.வே.பாலகுமாரன் எழுதிய "சாவிற்கு முன்னரே ஆயத்தமாகும் கல்லறை வரிகள்" என்ற அரசியல் கட்டுரையும், "சமாதானம்" ஒரு வரலாற்று நிர்ப்பந்தமும், தேர்தல் கோசமும் சமாதானத்தின் எதிரி சிங்கள அரசுதான்", "போர்நிறுத்த உடன்பாடு! கழுதை தேய்ந்து கட்டெறும்பாகிவிட்ட கதை", "சமாதானத்தின் உயிரிழையை EU பொருட்படுத்தவில்லையா!" போன்ற அரசியல் கட்டுரைகளுடன், கலாநிதி க.சோமாஸ்கந்தன் எழுதிய "போரும் சமாதானமும்" என்ற கட்டுரையையும் தாங்கி வருகின்றது.

மற்றும், "சமாதானகால முற்றுகைக்குள் சிக்கவைக்கும் முயற்சி", "இலங்கை இனப்பிரச்சினையின் போக்கும் இலங்கை நீதிமன்றங்களின் நோக்கும்" போன்ற கட்டுரைகளுடன் உலைக்களம், விழுதுகள், போராளிகளின் படைப்புக்கள் என வழமையான அம்சங்களுடன் இவ்வேடு வெளிவருகின்றது.இவ்இதழைஇணையத்தளத்தில், **www.viduthalaipulikal.com** எனும் முகவரியில் பார்வையிடலாம்.

## நிதி உதவி குறித்த செய்திக்கு முல்லை வர்த்தக சங்கம் மறுப்பு

முல்லைத்தீவில் சுனாமியால் பாதிக்கப்பட்ட வர்த்தகர்களின் நன்மை கருதி கியூடெக்-கரித்தாஸ் நிறுவனம் சுழற்சி முறையில் கடன்களை வழங்கியுள்ளது எனவும் ஏற்கனவே இரண்டு கட்டம் நிதி வழங்கப்பட்ட போதும் மூன்றாம் கட்டமாக கடந்த 3ஆம் திகதி 48 இலட்சம்ரூபாவை வர்த்தக சங்கத்திடம் வழங்கியதாகவும் கடந்த ஐந்தாம் திகதி ஈழநாதம் நாளேட்டில் வெளிவந்த செய்தி தவறானது என முல்லைப் பிரதேச வர்த்தக சங்கத் தினர் அறியத்தந்துள்ளனர். இது தொடர்பாக முல்லைப்பிரதேச வர்த்தக சங்கத்தின் தகவலின்படி தமக்கு கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தால் 18.06.2005 அன்று ரூபா நாற்பத்தேழு இலட்சத்து பதினேழாயிரம் ரூபா மட்டும்தான் கடனாக வழங்கப்பட்ட தென்றும் இதுஒவ்வொருமாதமும் சுழற்சி முறையில் மீளளிக்கும் கடன் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஒன்று கூடல்

நாளைகாலை 9.00மணிக்கு புதுக் குடியிருப்பு செயலகத்தில் முல்லை வலய புகுமுகமாணவர் ஒன்றியத்தினால் புகுமுகமாணவர் ஒன்று கூடல்நடத்தப்படவுள்ளது. அனைத்து புகுமுகமாணவர் களையும் இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு ஒன்றியம் அறிவித்துள்ளது.

### திருமலை...

இது தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் திருகோணமலை தமிழ் மக்கள் பேரவை முறைப்பாடு செய்துள்ளது.

அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி மக்களை அச்சுறுத்தும் வகையில் இத்தகைய முகாம்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. சிறிலங்கா இராணுவத்தின் இப் புதியமுகாம் அமைக்கும் பணியை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு தடுக்க வேண்டும் என்று தமிழ் மக்கள்பேரவை வலியுறுத்தியுள்ளது.

முகாம் அமைக்கும் பணிகள் நிறுத்தப்படாவிட்டால் மக்கள் போராட்டங்களை நடத்த நேரிடும் என்று தமிழ்மக்கள் பேரவை எச்சரித்துள்ளது.'கடந்த இரு நாட்களாக திரு கோணமலை முழுவதும்பெரும் எண்ணிக்கையிலான இராணுவத்தினரின் நடமாட்டம் உள்ளது. சாலைகளில் செல்லும் அனைத்து வாகனங்களையும் தடுத்து நிறுத்தி சோதனைகள் என்ற பெயரில் மக்களிடையே அச்சத்தையும், பதற்றத்தையும் சிறிலங்கா இராணுவம் உருவாக்கி வருகின்றது.

## சாவு அறிவித்தல்



### மகாலிங்கம் தேவகுமார் (முருகானந்தம்)

செல்வபுரம் முல்லைத்தீவைப் பிறப்பிடமாகவும் 8 ஆம் வட்டாரம் சிவநகர் புதுக்குடியிருப்பை தற்காலிக முகவரியாகவும் கொண்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக முல்லை மாவட்ட சாரதியான மகாலிங்கம் தேவ குமார் (முருகானந்தம்) 13.10.2005 அன்று அகாலச் சாவடைந்தார். இவர் அசம்பாவின் (ஞானம்) அன்புக் கணவரும் லோபனா, அஜந்தன், விஜயந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் போராளி இளம்பிறையின் (திலீபன்) அன்பு மாமனாரும் ஆவார்.அன்னாரின் இறுதிக் கிரியைகள் (15.10.2005) இன்று சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது தற்காலிக இல்லத்தில் நடைபெறும் என்பதை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

தகவல்:–
தமிழர் புனர்வாழ்வுக்கழகம்
முல்லை மாவட்டம்.

(6624)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.